வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 26.03.2025 புதன்கிழமை இதழ் : 87 பக்கங்கள் : 12

# இலங்கை - இந்திய மீனவர்கள் வவுனியாவில் இன்று சந்திப்பு

## யாழ். வந்தது தமிழக மீனவர் குழு

யாழ்ப்பாணம், மார்ச் 26

**இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையிலான பிரச்னைக்கு சுமுகத் தீர்வு காணும் நோக்குடன் இன்று புதன்கிழமை வவுனியாவில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையே சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.**

இந்தச் சந்திப்பில் கலந்து கொள்வதற்காக இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த ஜேசுராஜா, அல்வின், சகாயம், ஜஸ்ரின், ஜெர்மனியஸ் ஆகிய ஐவர் கொண்ட குழு நேற்று சென்னை விமான நிலையத்தில் இருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

நாகபட்டினத்தை சேர்ந்த சுரேஷ் என்பவர் ஏற்கனவே யாழ்ப்பாணத் தில் தங்கியுள்ள நிலையில்

11

## தர்ம சாஸ்தா குருகுல முதல்வர் மஹாதேவ குருக்கள் காலமானார்!



யாழ்ப்பாணம், மார்ச் 26

ஈழத்து அந்தணர்களால் பீஷ்ம பிதாமகர் என்று போற்றப்படும் இணுவில் தர்ம சாஸ்தா குருகுல முதல்வர் சிவஸ்ரீ தானு மஹாதேவ குருக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

ஈழத்தில் சிவாச்சாரியர்களுக்கான குருகுல மரபு வழியில் வேதாகம கல்வியை போதிப்பதற்காக இணுவிலில் தர்ம சாஸ்தா குரு குலத்தை நிறுவினார். இந்த நிறுவனத்தின் மூலம் சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக சிவாச்சார்ய மாணவர்களுக்கு இலவசமாக வேதாகமத்தை போதித்துள்ளார். இதனால், அவர் வாத்தியார் மாமா என்று

11

## தென்னக்கோனை பதவி நீக்குமாறு கோரிய பிரேரணை சபாநாயகரிடம்

கொழும்பு, மார்ச் 26

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து நீக்கக் கோரிய நம்பிக்கையில்லா பிரேரணை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவிடம் கையளிக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களாலேயே நேற்று செவ்வாய்க்கிழமை இந்த நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

இது தொடர்பில் பிரதி தொழில் அமைச்சர் மகிந்த ஜயசிங்க ஊடகங்களுக்கு விளக்கமளித்தார்.

11

## யாழ். ஒருங்கிணைப்பு குழு கூட்டம் எம். பிக்கள் தர்க்கத்தால் நிறுத்தம்!

### அர்ச்சுனா, இளங்குமரன் சபையில் அநாகரிக பேச்சு!



யாழ்ப்பாணம், மார்ச் 26

பாராளுமன்ற உறுப்பினர்களிடையே ஏற்பட்ட தர்க்கத்தால் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை இடைநிறுத்தப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களான இராமநாதன் அர்ச்சுனா, கே. இளங்குமரன் ஆகியோரின் வாக்குவாதத்தையும் அநாகரிக பேச்சுகளையும் அடுத்து, இருவரையும் கட்டுப்படுத்த

11

## ஜனாதிபதி மாளிகையை பயன்படுத்த திட்ட முன்மொழிவை சமர்ப்பிக்குக!

### யாழ். ஒருங்கிணைப்பு குழுவில் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 26

காங்கேசன்துறையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையை பயன்படுத்துவதற்கு முறையான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் குழுவின் தலைவரும் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன், யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் முதலானோரின் பங்கேற்பில் நடைபெற்றது.

இதில் யாழ்.

11

## ஹெரோயினுடன் பெண் உட்பட மூவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 26

ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் உட்பட மூன்று சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொக்குவில் - தலையாழி பகுதியில் வைத்தே யுவதியும் இரு இளைஞர்களுமாக மூவர் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில்

11

## அதீத ஹெரோயினால் இளைஞர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 26

ஊசி மூலமாக ஹெரோயின் போதைப்பொருளை அதீதமாக செலுத்திய இளைஞர் உயிரிழந்தார். நல்லூரை சேர்ந்த ஜெ.சுகன்யன் (வயது 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

11

## இலங்கை - சீன நட்பு என்றும் தொடரும்!

### சீனத் தூதுவர் நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 26

இலங்கையும் சீனாவும் கடினமான காலங்களில் மிகவும் நட்புடன் இணைந்து பணியாற்றியுள்ளன. இந்த நட்பு என்றும் தொடரும் என்று கூறியுள்ளார் சீனத் தூது வர் கீ சென்ஹொங்.

10ஆவது பாராளுமன்றத்தின் இலங்கை - சீன

11

## வியாழேந்திரனுக்கு விளக்கமறியல்!

கொழும்பு, மார்ச் 26

நேற்றைய தினம் கைதான முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனை எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு புதுக்கடை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்று செவ்வாய்க்கிழமை வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார்.

இலஞ்சம் பெறுவதற்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்று கூறப்படுகிறது. எனினும், கைதுக்கான காரணத்தை இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு உடனடியாக வெளியிடவில்லை. (ஐ)

## கூட்டத்திலிருந்து வெளியேறிய சிறீதரன்!

யாழ்ப்பாணம், மார்ச் 26

தனிப்பட்ட அரசியல் விவகாரங்கள், தனிநபர் அவதூறுகளை கட்டுப்படுத்தும் ஆற்றலை ஒருங்கிணைப்பு குழு தலைவருக்கு சுட்டிக்காட்டிவிட்டு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் வெளியேறினார்.

நேற்றைய தினம் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்றது. வலி. வடக்கில் முன்னெடுக்கப்படும் மின் இணைப்பு விடயம் தொடர்பில் விவாதிக்கப்பட்டபோது பாராளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், அர்ச்சுனா இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

11

## மோசமான செயல்பாடுகள் மூலம் அர்ச்சுனா கூட்டத்தை குழப்பினார்!

### அமைச்சர் சந்திரசேகர் சாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 26

மோசமான செயல்பாடுகள் மூலம் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தை பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா குழப்பியுள்ளார். இனிவரும் காலங்களில் தலைவருக்குரிய அதிகாரத்தை முழுமையாக பயன்படுத்துவேன் - இவ்வாறு அமைச்சரும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்ட தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் ஏற்பட்ட தர்க்கத்தைத் தொடர்ந்து, அதனை இடைநிறுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 வருடங்கள் கடந்தும் அரசியல் கைதிகள் விடுதலையாகவில்லை

## அரசை சாடுகிறது மக்கள் போராட்ட முன்னணி

கொழும்பு, மார்ச் 26

பத்தொன்பது வயதில் கைது செய்யப்பட்ட சிவகுமார், பார்த்தீபன் என்ற இருவர் 30 வருடங்கள் கடந்தும் விடுதலை அடைய முடியாமல் சிறையில் உள்ளனர். அரசியல் கைதிகள் விடுதலை குறித்து வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் தேசிய மக்கள் சக்தியின் தோழர்கள் பொய்யான வாக்குறுதிகளுடன் மீண்டும் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர் - இவ்வாறு மக்கள் போராட்ட முன்னணியின் ராஜ்குமார் ரஜீவ் காந் தெரிவித்துள்ளார்.

மகசின் சிறைச்சாலையில் அரசியல் கைதிகள் சிலரை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கும் அதிகாரத்துக்கும் வந்து ஆறு மாதங்கள் கடந்து விட்டன. ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அவர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக மக்களுக்கு சில உறுதி மொழிகளை வழங்கியிருந்தார்கள். அதில், நாங்கள் தொடர்ச்சியாக வேலை செய்துகொண்டிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை மிகவும் முக்கியமான தொன்று. அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக, தொடர்ச்சியாக நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம். இந்த நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அரசியல் கைதிகள் பல்வேறு ஆண்டுகளாக சிறையில் வாடிக்கொண்டிருக்கின்றனர். 30 ஆண்டுகளுக்கு மேல இந்த சிறைச்சாலைக்குள் பல அரசியல் கைதிகள் உள்ளனர்,

நான் அவர்களில் ஒரு சிலரைப் பார்ப்பதற்காக இங்கு வந்தேன். கிட்டத்தட்ட 19 வயதில் கைதுசெய்யப்பட்ட சிவகுமார், பார்த்தீபன் ஆகியோர் இன்று 50 வயதை எட்டியும் விடுதலை அடைய முடியாத நிலையில் உள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் விஜித ஹேரத், பிரதி அமைச்சர் ஹர்ச நாணயக்கார, பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுசென்றேன். ஆனால், இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மீண்டும் தேசிய மக்கள் சக்தியின் தோழர்கள் பொய்யான வாக்குறுதிகளுடன் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர். (ஐ)



# அனலைதீவில் இலவச கல்வி நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

அனலைதீவில் சிறார்களின் ஆங்கில கல்வியை விருத்தி செய்யும் நோக்குடன் ஐயனருள் கல்வி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆசிரியை சுஜெந்திரன் அஞ்சலா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் கலந்து கொண்டு நிறுவனத்தை ஆரம்பித்து வைத்தார். முதற்கட்டமாக சிறார்களுக்கு இலவசமாக ஆங்கில கல்வி போதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# இஸ்லாமிய மக்களுக்கு பொருட்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் ரமழான் பெருநாளை முன்னிட்டு இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய மக்களின் ரமழான் அன்பளிப்பு பொருட்களை கையளிக்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி கலந்து கொண்டு பொருட்களை வழங்கிவைத்தார். யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட 220 குடும்பங்களுக்கு இந்த உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், யாழ்ப்பாணம் இந்திய தூதரக அதிகாரி ரம்யா, யாழ். - கிளிநொச்சி மக்கள் பணிமனையின் தலைவர் மௌலவி பி. சுபியான் உள்ளிட்ட தூதரக குழுவினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

வேலணை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 100 குடும்பங்களுக்கு இன்றைய தினம் ரமழான் அன்பளிப்பு பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-05)

# பெண் தொழில் முயற்சியாளர்க்கு வியாபார உபகரணங்கள் வழங்கல்

மன்னார், மார்ச் 26

"பெண்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தல் மற்றும் முயற்சியாண்மையை மேம்படுத்துதல்" எனும் தொனிப் பொருளில் ஜப்பான் அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் யு. என். வுமன் கிறிசலிஸ் நிறுவனங்களால் மன்னார் மாவட்டத்தில் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான உதவி திட்டம் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

மன்னார் நகர சபை மண்டபத்தில் நடந்த இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜப்பான் தூதரகத்தின் அமைச்சர் மற்றும் பிரதி பிரதானி கமோ ஷிடா, சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகேஸ்வரன் ஆகியோர் பங்கேற்றனர்.


இதன்போது வியாபார விருத்தி தொடர்பான பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு, மன்னார் மாவட்டத்தில் உள்ள பெண் தொழில் முயற்சியாளர்களால் தயாரிக்கப்



பட்ட பல்வேறுபட்ட உற்பத்திப் பொருட்கள் (உணவு, கலைப் பொருட்கள், ஆடை வகைகள்) என்பன காட்சிப்படுத்தப்பட்டன. அத்துடன், விற்பனை சந்தையும் நடைபெற்றது.

இதேநேரம், பெண்களின் வியாபார முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் தெரிவுசெய்யப்பட்ட பெண்களுக்கான பல்வேறு தொழில் விருத்திக்கான உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

# வீதியை உழுத நபரால் அமைதியற்ற நிலைமை



முல்லைத்தீவு, மார்ச் 26

புதுக்குடியிருப்பு - கைவேலியில் அரசுக்கு சொந்தமான வீதியை தனிநபர் ஒருவர் உழவியந்திரத்தால் உழுததால் அந்தப் பகுதியில் அமைதியற்ற நிலை ஏற்பட்டது.

கைவேலி கிராமத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமான ஆத்திப்புலவு, கிருஷ்ணர் வீதியே சுமார் 75 மீற்றர் தூரத்துக்கு உழவு இயந்திரம் மூலம் உழப்பட்டது.

இதையடுத்து, அந்தப் பகுதியில் அமைதியற்ற நிலை ஏற்பட்டது. இது தொடர்பில், பொலிஸாருக்கும் பிரதேச சபைக்கும் தகவல் அளிக்கப்பட்டது.

இதையடுத்து, அங்கு வந்த புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் கிருஷாந்தன் உழப்பட்ட வீதியை பார்வையிட்டார். அத்துடன், இது தொடர்பில் எழுத்துமூல முறைப்பாடு தருமாறும் கேட்ட அவர், வீதியை விரைவில் சீரமைத்துத் தருவதாகவும் உறுதியளித்தார்.

# சரியானவர்களை மக்கள் இனங்கண்டு தெரிவுசெய்வர்!

## ஈ. பி. டி. பியின் டக்ளஸ் சொல்கிறார்

மன்னார், மார்ச் 26

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மக்கள் தமது கடந்த கால அனுபவங்களை கருத்தில் கொண்டு தமக்கு சேவையாற்றக் கூடியவர்களை அடையாளம் கண்டு - சரியானவர்களை தெரிவு செய்வார்கள் என்று ஈ. பி. டி. பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரதேச சபைக்கான கட்டுப்பணத்தை நேற்று செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மக்கள் தமது கடந்த கால அனுபவங்களை கருத்தில் கொண்டு தமக்கு சேவையாற்ற கூடியவர்களை அடையாளம் கண்டு - ரியானவர்களை மக்கள் தெரிவு செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

அந்த வகையில் கட்சியின் மாவட்ட முக்கியஸ்தர்களுடன் சென்று மன்னார் பிரதேச சபைக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளேன். இம்முறை



மன்னார் மாவட்டத்தில் இரண்டு சபைகளிலே போட்டியிடவுள்ளோம். வரும் நாட்களில் அனைத்து சபைகளிலும் போட்டியிட்டு அவற்றை கைப்பற்றுவோம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
26.03.2025 புதன்கிழமை
பிலவ வருடம், பங்குனி 12

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# படித்த சமூகமொன்றின் பாராளுமன்ற உறுப்பினர்கள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாதங்களை வியந்து நோக்கிய காலம் ஒன்றும் இருந்தது. ஒரு காலத்தில் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் உரையாற்றும்போது அந்த உரையை வியந்தவர்கள் உண்டு. அமிர்தலிங்கம் பேசிக் கொண்டிருக்கும்போது, அற்புதமான உரையென்று சபாநாயகரே பாராட்டிய சந்தர்ப்பங்களும் உண்டு. அந்தளவுக்கு அன்றைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரையின் கனதியும் அதனை வெளிப்படுத்தும் நாகரிகமும் அவர்களின் அரசியல் நிலைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் - எதிர்ப்பவர்களால்கூட வியந்து நோக்கப்பட்டது.

அன்றைய சூழலில் வடக்கு, கிழக்கில் முக்கியமாக வடக்கிலிருந்து சென்ற தமிழ் பிரதிநிதிகள் கருத்து வேறுபாடுகளை கடந்தும் மதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால், இன்று ஒருவர் பேசுவதை முன்வைத்து யாழ்ப்பாணத்தில் அனைவருமே இப்படித்தானா என்று பரிகசிக்குமளவுக்கு நிலைமை தரம் தாழ்ந்துவிட்டது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் அபிவிருத்தி குழுக் கூட்டங்கள் தொடர்பான காணொலிகள் ஓய்வுநேர நகைச்சுவைக்காக பயன்படுத்தும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒடுக்குமுறைக்குள்ளாகி இருப்பதாகக் கூறிவரும் - அதற்கான நீதியை பெற்றுத் தரும் பொறுப்பை சர்வதேசத்திடம் எதிர்பார்க்கும் தமிழ் சமூகம் தங்களை பிரதிநிதித்துவம் செய்பவர்களை சரியாகத் தெரிவு செய்ய முடியாத சமூகமாக இருப்பதுதான் இந்த பரிகாச நிலைக்குக் காரணம்.

பொருத்தமற்றவர்கள் பொருத்தமற்ற இடங்களுக்காகத் தெரிவு செய்யப்படுகின்றபோது, அவர்கள் பொருத்தமற்ற நடவடிக்கைகளைத்தான் முன்னெடுப்பார்கள். அதுதான் தற்போது ஒவ்வொரு அபிவிருத்தி குழுக் கூட்டத்திலும் பாராளுமன்றத்திலும் அரங்கேறி வருகின்றது. யாழ்ப்பாண அபிவிருத்தி குழுக் கூட்டங்களில் பங்குகொள்ளும் இராணுவ அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் தமிழ் பிரதிநிதிகளின் சண்டைகளைப் பார்த்து புன்னகைத்துக் கொண்டிருக்கின்றனர்.

எந்தளவுக்கு இழிநிலைக்குள் தமிழ் சமூகம் தள்ளப்பட்டிருக்கிறது. இதற்கான காரணம் என்ன? தமிழ் மக்களை வெறும் தேசியவாத சுலோகத்தை முன்வைத்து அணி திரட்ட முற்பட்டதுதான் இன்றைய அனைத்துவிதமான அவல நிலைக்கும் காரணம். தமிழ் மக்களை ஒன்றுதிரட்ட வேண்டும், ஒன்றுதிரட்டுவதுதான் தமிழ்த் தேசியம் என்றவாறான தவறான கருத்துகளை விதைத்தவர்களும் இந்த அவல நிலைக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களாவர்.

மக்களை வசியப்படுத்துவதற்கு எவ்வாறான மலினமான விடயங்களையும் தேசியத்தின் பெயரால் செய்யலாம் என்னும் நிலைமையே இன்று ஏற்பட்டிருக்கிறது. பாராளுமன்றத்தில் முட்டாள்தனமாக பேசினால் அதனை தவறு என்று விமர்சிப்பதை விடவும் அற்புதமாக வெளுத்து வாங்கினீர்கள் என்று கூறி, சன்மானம் கொடுப்பதற்கு புலம்பெயர் சூழலில் ஒரு கூட்டம் உருவாகியிருக்கிறது. அவர்களும் இவ்வாறான அவல நிலைக்கு முக்கிய காரணமாவர்.

இந்த இடைவெளியை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வோர் தமிழ் மக்கள் மத்தியில் எவ்வித அர்ப்பணிப்பும் இல்லாமல் தலைவர்கள் ஆகிவிடலாம் என்னும் நிலைமை உருவாகிவிட்டது. இந்தப் பின்புலத்தில்தான் முகநூல்களில் தொடர்ந்து பரபரப்பான காணொலிகளை வெளியிடுபவர்கள், விடுதலைப் புலிகள் தொடர்பில் முகநூல்களில் பதிவிடுபவர்கள் அனைவரும் உடனடி கதாநாயகர்களாகி விடுகின்றனர். இந்த அவலநிலைக்கு முதல் காரணம் சிந்திக்காமல் வாக்களிக்கும் மக்கள். இரண்டாவது காரணம் இவ்வாறான முட்டாள்தனங்களை இரசிக்கும் புலம்பெயர் மனோபாவம்.

## பூநகரி பிரதேச சபைக்கு ஈ.பி.டி.பி. கட்டுப்பணம்

*கிளிநொச்சி, மார்ச் 26*

பூநகரி பிரதேச சபையில் போட்டியிடுவதற்கான கட்டுப் பணத்தை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி நேற்று செலுத்தியது.

அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கட்டுப் பணத்தை மாவட்ட தேர்தல் பணிமனையில் செலுத்தினார். (ஐ)

## மெய்வன்மை போட்டி

*யாழ்ப்பாணம், மார்ச் 26*

கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியின் இல்ல மெய்வன்மை போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வீரசங்கிலியன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் கல்வியியில் கல்லூரியின் தலைவர் இ. லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அலகுகள் பிரிவின் தலைவர் - சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். சபானந்த், சிறப்பு விருந்தினர்களாக தீவக கல்வி வலயத்தின் உதவி கல்வி பணிப்பாளர் கே. கந்தசெல்வன், தொழிலதிபர் ஈ எஸ். பி. நாகரட்ணம், வர்த்தக நிலைய உரிமையாளர் திருமதி திருநிறைச்செல்வி பொன்குமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

## தேர்த் திருவிழா வர்ணனை

*யாழ்ப்பாணம், மார்ச் 26*

காரைநகர் - திருமணற்காடு முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத்தின் பெருந் திருவிழா கடந்த 15ஆம் திகதி ஆரம்பமாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், தேர், தீர்த்தத் திருவிழாவில் தெய்வீகப்பேருரை, வர்ணனைகளை மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன் நிகழ்த்தவுள்ளார். (ஐ)

## வட மாகாண பொலிஸாருடன் தேர்தல் ஆணையர் சந்திப்பு!



*கிளிநொச்சி, மார்ச் 26*


தேர்தல் முறைப்பாடுகள் விடயத்தில் பொலிஸாரின் முகாமைத்துவம், தேர்தல் கடமைகளின்போது அவர்களின் வகிபாகம் தொடர்பாக வட மாகாண பொலிஸ் அதிகாரிகளுடன் தேர்தல் ஆணையாளர் சந்தித்து கலந்துரையாடினார்.

கிளிநொச்சியிலுள்ள தனியார் விடுதியொன்றில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இதில், இதில் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய மெய்நிகர் வழியில் இணைந்து கொண்டார்.

இந்த சந்திப்பில் தேர்தல் விடயங்கள், கடமைகள், படைத் துறையினரின் செயல்பாடுகள் தொடர்பாக வடக்கு மாகாணத்தை சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம், விசாரணை மற்றும் திட்டங் கள்) பி. பீ. சி. குலரத்ன, கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், பொலிஸ் திணைக்களத்தின் சட்ட பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர, யாழ்ப்பாண மற்றும் கிளி நொச்சி மாவட்டங்களின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள், பொலிஸ் அதிகாரிகள், வட மாகாணத்தின் அனைத்து பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், தேர்தலுடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.(ஐ)

## பூநகரி பிரதேச சபைக்கு ஐ. த. தே. கூட்டணி வேட்புமனு!



*கிளிநொச்சி, மார்ச் 26*

உள்ளூராட்சி தேர்தலில் பூநகரி பிரதேச சபையில் போட்டியிடுவதற்காக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி நேற்றைய தினம் வேட்புமனுவை தாக்கல் செய்தது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையிலான குழுவினர் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல் பணிமனையில் இந்த வேட்புமனுவை தாக்கல் செய்தனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனி - 26 புதன்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 12
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : துவாதசி




**மேடம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**இடபம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்னச் சின்ன கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகளை வசூலிப்பது தாமதம் ஏற்படும். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**கடகம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் உங்களை ஆலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**கன்னி**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதிய வேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**துலாம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். சக ஊழியர் களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் குறையும். உறவினர்களால் சங்கடங்கள் வரும்.பொறுப்புகள் அதிகரிக்கும். முன்னேறும் நாள்.

**கும்பம்**
உங்கள் இலக்குகளை நோக்கி முன்னேறுவீர்கள். புது பொருள் வந்து சேரும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**மீனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

யாழ்ப்பாணத்தில் மின்கலங்கள் திருட்டு:

# கடற்படை முன்னாள் சிப்பாய் உட்பட ஐவருக்கு 4ஆம் திகதி வரை மறியல்!

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணத்தில் உள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களின் மின்கலங்களை தொடர்ச்சியாக திருடி வந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கடற்படை முன்னாள் சிப்பாய் உள்ளிட்ட ஐந்து பேரையும் எதிர்வரும் 04ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கைத்தொலைபேசி தொலைத்தொடர்பு வலையமைப்புக்களின் தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு பொருத்தப்பட்டிருந்த மின் கலங்கள் தொடர்ச்சியாக களவாடப்பட்டு வந்துள்ளன.

இது தொடர்பில், கோபுரங்கள் அமைந்துள்ள பகுதிகளுக்குரிய பொலிஸ் நிலையங்களில், குறித்த நிறுவனங்கள் முறைப்பாடுகளை பதிவு செய்தன.

முறைப்பாடுகளின் பிரகாரம் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நளின் தர்ஷன தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், மின்கலன்களை திருடியவர்கள் அம்பாறை பகுதியில் பதுங்கியிருப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற விசேட பொலிஸ் குழுவினர் சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை அம்பாறையிலிருந்து கோப்பாய் பொலிஸ் நிலையம் கொண்டு வந்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த வேளை கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் கடற்படை முன்னாள் சிப்பாய் எனவும், மற்றுமொருவர் திருடப்பட்ட மின்கலங்களை கொள்வனவு செய்தவர் எனவும் ஏனைய மூவரும் திருட்டுக்கு உடந்தையாக செயல்பட்டவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 192 மின் கலங்களைத் திருடியுள்ளனர் எனவும் மின்கலம் ஒன்றின் பெறுமதி ஓர் இலட்சம் ரூபாய்க்கும் அதிகம் என பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில், ஐவரையும் எதிர்வரும் 04ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.

இதேவேளை, திருடப்பட்ட மின்கலங்களை பொலிஸார் மீட்டுள்ளதுடன், அவற்றை நீதிமன்றில் சான்றுப் பொருட்களாக பாரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ-05)

# மின் கம்பத்தில் கட்டி வைத்து 14 வயது சிறுமிமீது தாக்குதல்

## சட்ட நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தல்

வடமராட்சி, மார்ச் 26

வடமராட்சி கிழக்கு குடத்தனை பொற்பதியில் சிறுமி ஒருவரை மின் கம்பத்தில் கட்டி வைத்து தாக்கியமை தொடர்பில் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சட்ட வைத்திய அதிகாரி மருதங்கேணி பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

குறித்த பகுதியில் 14 வயதுச் சிறுமி ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை அயலில் உள்ள வர்த்தக நிலையத்துக்கு பொருட்கள் வாங்கச் சென்றதாகவும் அங்கு இனிப்புகளைத் திருடியதாக கூறி கடையின் உரிமையாளரான பெண், சிறுமியை மின் கம்பத்தில் கட்டி வைத்து தாக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் உடல் காயங்களுக்குள்ளான சிறுமி அன்று இரவே பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்ட பருத்தித்துறை சட்ட வைத்திய அதிகாரி, சிறுமியின் உடலில் காயங்கள் காணப்படுவதன் காரணமாக தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு மருத்துவமனையில் உள்ள பருத்தித்துறை பொலிஸார் ஊடாக மருதங்கேணிப் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் மருதங்கேணிப் பொலிஸார், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைத்து சிறுமியிடம் வாக்கு மூலம் பெற்ற போது மின்கம்பத்தில் கட்டி வைத்து தாக்கியதாக சிறுமி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து தாக்கியதாக கூறப்படும் பெண்ணின் வீட்டுக்கு பொலிஸார் சென்றபோது, வீடு பூட்டி இருந்ததனால் இது தொடர்பில் தொலைபேசி ஊடாக அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பில் அப்பகுதியைச் சேர்ந்த பொது அமைப்பால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்துக்கு தொலைபேசி வழியாக முறையிடப்பட்டுள்ளது. (எ-02)

# யாழ்ப்பாணத்தில் ஏ.ரி.எம். அட்டையை திருடி மதுபானம் கொள்வனவு; நால்வர் மறியலில்!

யாழ்ப்பாணம், மார்ச் 26

வீட்டிலிருந்து 95 ஆயிரம் ரூபாய் மற்றும் தன்னியக்க பணப்பரிமாற்ற அட்டை (ஏ.ரி.எம்.) என்பனவற்றைத் திருடிய குற்றச்சாட்டில் பெண் உட்பட நால்வர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை எதிர்வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கோப்பாய் பகுதியில் உள்ள ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் அவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். விசாரணைகளின் அடிப்படையில் அந்த வீட்டில் பணிபுரிந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தொடர் விசாரணைகளிலும், சி. சி. ரிவி கமரா பதிவுகளின் அடிப்படையிலும் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பின்னர் கைது செய்யப்பட்ட மூவரும் திருடப்பட்ட ஏ. ரி. எம். அட்டையைக் கொண்டு 20 ஆயிரம் ரூபாயை எடுத்து மதுபானம் கொள்வனவு செய்துள்ளமை விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

(எ)

# பொலிஸ், இராணுவம் திடீர் சுற்றிவளைப்பு

வவுனியா, மார்ச் 26

வவுனியா கற்குழி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

சுற்றிவளைப்பில் ஈடுபட்டு தலைமறைவாகியுள்ள நபர்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் நபர்களை கைது செய்யும் நோக் குடன் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட் டது.

வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரியின் தலைமையில் இராணுவத்துடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை யில் சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் சோதனை யிடப்பட்டதுடன், குடியிருப்பு பகுதிகளும் சோத னைக்கு உட்படுத்தப்பட்டன.

(எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி வீஸாக்கள் மூலம் கனடாவுக்கு தப்பிச் செல்ல முயன்ற 11 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 26

போலி கனேடிய விசாக்களைப் பயன்படுத்தி கனடாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற 11 பேரும் அவர்களுக்கு உதவிய தரகர் ஒருவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கனடாவுக்கு தப்பிச் செல்ல முயன்றவேளை கைதான 11 பேரும் கொழும்பு, களுத்துறை, பதுளை மற்றும் அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 35 முதல் 40 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

இந்த சந்தேக நபர்களில் அரச உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் மற்றும் அண்மையில் வெளிநாடு சென்றுவிட்டு மீண்டும் நாடு திரும்பியவர்களும் காணப்படுவதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் விமான சேவையின் யு.எல் - 225 விமானத்தில் டுபாய்க்குச் சென்று, பின்னர் அங்கிருந்து கனடாவுக்குத் தப்பிச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது, சந்தேக நபர்கள் சோதனை நடவடிக்கைகளுக்காக தங்களது ஆவணங்களை விமான நிலைய அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளனர்.

அந்த ஆவணங்கள் குறித்து சந்தேகமடைந்த விமான நிலைய அதிகாரிகள், அவற்றை குடிவரவு -குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

பின்னர், திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், சந்தேக நபர்களின் கனடா விஸாக்கள் போலியாக தயாரிக்கப்பட்டவை என்பது தெரியவந்துள்ளது.

கைதான 11 சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அவர்களுடன் விமான நிலையத்துக்குச் சென்றிருந்த தரகர் ஒருவரும் விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# மனித உரிமை மீறல் குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றில் நிறுத்தவேண்டும்

## பிரிட்டன் எம்.பி. உமாகுமரன் கருத்து



லண்டன், மார்ச் 26

**இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட தனிநபர்களுக்கு எதிராகப் பிரிட்டன் விதித்துள்ள தடைகளை வரவேற்றுள்ள பிரிட்டனின் பாராளுமன்ற உறுப்பினர் உமாகுமரன், மனித உரிமை மீறல் குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தவேண்டும் என நான் தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுப்பேன் என தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையின் உள்நாட்டு போரின் போது பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட தனிநபர்களுக்கு எதிராக பிரிட்டன் விதித்துள்ள தடைகளை நான் வரவேற்கின்றேன்.

யுத்தத்தின் இறுதித் தருணங்களில் இழைக்கப்பட்ட அட்டூழியங்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும் என ஐக்கிய இராச்சியத்தில் வாழும் தமிழர்களும் உலகெங்கிலும் வாழும் தமிழர்களும் நீண்ட காலமாக வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

மோதலின் வடுக்களும், பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டமையும் என்றும் நினைவிலிருந்து அழியாது.தமிழ் சமூகத்துக்குள் இது குறித்த வலி எவ்வளவு ஆழமானதாக காணப்படுகின்றது என்பது எனக்கு தெரியும், அவர்களில் பலர் 15 வருடங்களாக நீதிக்கான பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர் .

மனித உரிமை மீறல்களுக்கு எதிரான தடை முக்கியமான முதலாவது நடவடிக்கையாகும். மிக நீண்ட காலமாக குற்றவாளிகள் தண்டனையின் பிடியிலிருந்து தப்பியுள்ளனர்.

மனித உரிமை மீறல்களுக்கு காரணமானவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுவதை அனுமதிக்கப் போவதில்லை என பல காலமாக தொழில்கட்சி உறுதியளித்து வந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் பரிந்துரைத்தது போன்று மனித உரிமை மீறல் குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டும் என நான் தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுப் பேன்.

உயிர்பிழைத் தவர்கள், விடைகளை இன்னமும் தேடும் குடும்பத்தவர்கள்,இந்த குற்றங்களின் நிழலில் வளரும் அடுத்த தலைமுறையினருக்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம், நீதி பொறுப்புக்கூறலிற்கு வேண்டுகோள் விடுப்பதற்கு எனது குரலை பயன்படுத்துவதை ஒருபோதும் நிறுத்தமாட்டேன்-என்றார். (அ)

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சந்தைகளில் விசேட பரிசோதனை

கொழும்பு, மார்ச் 26

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சந்தையில் விசேட பரிசோதனைகள் மற்றும் விசாரணைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக என்று நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் வாரத்துக்குள் கையிருப்புகள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தி விசேட சோதனைகள் மேற்கொள்ளப்படும் என நுகர்வோர் அதிகார சபையின் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்தார்.

விலை குறைப்பு என்ற போர்வையில் செய்யப்படும் பல்வேறு மோசடிகள் குறித்து அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், இந்த விசேட சோதனை நடவடிக்கைகள் பண்டிகை காலம் முடியும் வரை தொடரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# முச்சக்கரவண்டிகளைத் திருடி விற்பனை செய்த 7 பேர் கைது

கொழும்பு, மார்ச் 26

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து முச்சக்கரவண்டிகளை திருடி இலக்கங்கள் மற்றும் நிறங்களை மாற்றி விற்பனை செய்யும் மோசடியில் ஈடுபட்ட ஏழு பேர் கொண்ட ஒழுங்கமைக்கப்பட்ட கும்பலைச் சேர்ந்தவர்களை கைது செய்துள்ளதாக வெல்லம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களுடன், ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான 13 முச்சக்கர வண்டிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வெலிக்கடை மற்றும் வெல்லம்பிட்டிய பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட முச்சக்கர வண்டி திருட்டு தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார். (அ)

# உள்ளூராட்சி தேர்தல் குறித்து குவிந்துவரும் முறைப்பாடுகள்

## சட்டத்தை மீறிய 32 பேர் கைது

கொழும்பு, மார்ச் 26

எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இரு வெவ்வேறு பொலிஸ் நிலையங்களுக்கு நேற்று திங்கட்கிழமை இரண்டு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர் ஒருவரின் பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் சமூக ஊடகங்களில் காணொளிகளைப் பதிவிட்டுள்ளதாக பொலனறுவை - சிறிபுர பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

மேலும், உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர் ஒருவருக்கு சார்பாக பெரிய கட்டவுட் ஒன்று வைக்கப்பட்டுள்ளதாக மாத்தளை - மஹவெல பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது. இந்நிலையில் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் இது வரை 32 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.பொலிஸ் ஊடகப் பேச்சாளர்சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க இதனைத் தெரிவித்தார்.(அ)

# தேர்தல் காலத்தில் நடைபெற்று வரும் அபிவிருத்தி குறித்து விவரம் வழங்குக!

## தேர்தல் ஆணையகம் அரசுக்கு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 26

தேர்தல் காலத்தில் நடைபெற்று வரும் அபிவிருத்தி திட்டங்கள் குறித்த விவரங்களை வழங்குமாறு தேர்தல் ஆணையகம் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளது.

அதன்படி,

அமைச்சுக்களும் அரசுத் துறைகளும் தொடர் புடைய திட்டங்கள் தொடர் பான தகவல்களை மறுஆய் வுக்காக தேர்தல் ஆணையகத் திடம் சமர்ப்பிக்கவேண்டும்.

வழங்கப்பட்ட அபிவிருத் தித் திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, தேர்தல் காலத்தில் அவை தொடர்வது குறித்து இறுதி முடிவு எடுக்கப் படும் என்று ஆணையம் தெரிவித்துள்ளது.

கூடுதலாக,

இந்தத் திட்டங் களில் ஏதேனும் ஒன்று தேர்த லில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகக் கண்டறியப் பட்டால்,

தேர்தலுக்குப் பின் னர் வரை அவற்றை ஒத்திவைக் குமாறு அரசாங்கத்துக்கு அறிவுறுத்தப்படும் என்று ஆணையம் தெரிவித்துள்ளது.

பாரம்பரியமாக, தேர்தல் காலத்தில் எடுக்கப்படும் அமைச்சரவை முடிவுகள் தேர்தல் ஆணையகத்துக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

அவை அவற்றை மதிப் பாய்வு செய்து அதற்கேற்ப அரசாங்கத்திற்கு வழிகாட்டுதலை வழங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மகளின் போக்குவரத்துக்காக அரச வாகனம் வழங்கிய பாராளுமன்ற முன்னாள் பிரதானி!

கொழும்பு, மார்ச் 26

பாராளுமன்ற முன்னாள் பிரதானி ஒருவர் தனது மகளின் போக்குவரத்துக்காக வாகனம் மற்றும் எரிபொருளைச் சில காலமாக பயன்படுத்தியுள்ளதாக பாராளுமன்ற வாகனங்கள் தொடர்பான விசாரணைகளில் தெரியவந்துள்ளது.பாராளுமன்றத்தின் வாகனம் ஒன்று அம்பாறை பிரதேசத்துக்கு அடிக்கடி வருகை தந்துள்ளதாக தெரியவந்ததையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே இந்த தகவல் தெரியவந்துள்ளதாக தகவல் தெரிவிக்கின்றன.கடந்த பத்து வருடங்களில் இந்த பிரதானி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இரண்டு வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளதாகவும், தனது வாகனங்களுக்கு வரம்பற்ற எரிபொருளை பயன்படுத்தியுள்ளதாகவும் விசாரணை குழுக்களுக்கு தகவல் வெளியாகியுள்ளது.கடந்த 10 ஆண்டுகளில் பாராளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகர்கள், பிரதிச் சபாநாயகர்கள், பிரதிக் குழுத் தலைவர்கள், பொதுச் செயலாளர்கள், வாகனங்கள் மற்றும் எரிபொருளைப்பயன்படுத்திய விதம்தொடர்பில் ஆராய சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்னவின் உத்தரவின் பேரில் விசேட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.(அ)

# 10,886 டெங்கு நோயாளர் பதிவு!

கொழும்பு, மார்ச் 26

நாட்டின் பல பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக எதிர்வரும் நாட்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் எனச் சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 10 ஆயிரத்து 886 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

கடும் காய்ச்சலுடனான தலைவலி,

குமட்டல், வாந்தி, தோளில் சிவப்பு புள்ளிகள், இரத்த போக்கு, தசை மற்றும் மூட்டு வலி போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் உடன டியாக வைத்தியசா லைக்கோ அல்லது தகுதி வாய்ந்த வைத்தியரிடமோ சென்று உரிய சிகிச்சையை பெற்றுக் கொள்ளுமாறு தேசிய டெங்கு நோய் தடுப்பு பிரிவு பொதுமக்களைக் கோரியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிட்ட குற்றக் குழுக்களுக்கு கீழ்ப்படிந்த வாழ்க்கை நாட்டில்!

## அரசைச் சாடுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, மார்ச் 26

வளமான நாடு - அழகான வாழ்க்கை எனும் தொனிப்பொருளுடன் ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம், இன்று மக்கள் வாழ முடியாத நாட்டை உருவாக்கியுள்ளதுடன், திட்டமிட்ட குற்றக்குழுக்களுக்கு கீழ்ப்படிந்த வாழ்க்கையைக் கட்டியெழுப்பியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.



உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அனுராதபுரம் மாவட்ட வேட்பாளர்களுடன் நேற்று முன் தினம் இடம்பெற்ற சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சமூகம் இன்று குரூரமான கொலை கலாசாரத்திற்கும், திட்டமிட்ட குற்றக்குழுக்களுக்கும் இரையாக்கப்பட்டுள்ளது.

சட்டம் அமல்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை. நாட்டில் சட்டம் அமுலில் இல்லை.

கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பொலிஸ்மா அதிபரைக்கூட இந்த அரசாங்கத்தினால் கண்டுபிடிக்க முடியவில்லை.

தற்போதைய அரசாங்கத்தின் புலனாய்வுத்துறையின் இயலுமை எவ்வாறானது என்பதை இவ்வாறானதொரு சூழ்நிலையை வைத்து ஊகிக்க முடிகிறது.

நீதிமன்றில் துப்பாக்கிச் சூடு நடத்தி, கொலை செய்வதற்குச் சதித்திட்டம் தீட்டிய சந்தேக நபர் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

இதன் காரணமாக மக்களின் உயிர்ப் பாதுகாப்புடன் தேசிய பாதுகாப்பும் சவாலுக்குப்ப டுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து பேசும் போதும், கேள்வி எழுப்பும் போதும், தேசிய பாதுகாப்பில் எவ்விதப் பிரச்னையும் இல்லை என அரசாங்கம் கூறிவருகிறது.

ஆனால் அண்மையில் தெவிநுவர பிரதேசத்திலும்கூட இரட்டைக் கொலைச் சம்பவம் இடம்பெற்றது. கொலைக் கும்பல்கள் எங்கும் பரவியுள்ள நிலையில் மக்கள் அச்சமின்றி, சந்தேகமின்றி வாழும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

வளமான நாடு அழகான வாழ்க்கையை உருவாக்குவோம் எனக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம், இன்று வாழ முடியாத நாட்டை உருவாக்கி, திட்டமிட்ட குற்றக்குழுக்களுக்குக் கீழ்ப்படிந்த ஒர் வாழ்க்கையைக் கட்டியெழுப்பியுள்ளது-என்றார். (அ)

# குற்றங்களை தடுப்பதற்கு 500 சிறப்பு அதிரடிப்படை!

கொழும்பு, மார்ச் 26

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் பிற சட்டவிரோத நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காக புதிதாக சேர்க்கப்பட்ட 500 சிறப்பு அதிரடிப்படை பணியாளர்களை ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த புதிய சிறப்பு அதிரடிப்படை உறுப்பினர்கள் விரைவில் தங்கள் பயிற்சியை முடித்துவிட்டு பணிக்கு வருவார்கள் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

மேலும், தென் மாகாணத்தில் சமீபத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த நான்கு பொலிஸ் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், அம்பலாங்கொடைப் பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைச் சமாளிக்க இரண்டு சிறப்பு பொலிஸ் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை கராம்புக்கு கேள்வி அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 26

சந்தையில் ஒரு கிலோ காய்ந்த கராம்பின் விலை 2500 ரூபாய் வரையில் அதிகரித்துள்ளது.

ஒரு கிலோ பச்சை கராம்பின் விலை 800 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாக ஏற்றுமதி விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது. கண்டி, மாத்தளை, கேகாலை, நுவரெலியா, மற்றும் குருநாகல் மாவட்டத்தில் அதிகளவில் கராம்பு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

வெளிநாட்டில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கராம்புக்கு நல்ல கேள்வி உள்ளதாகவும் அந்த திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# சமூக ஊடகங்களில் தவறாக பிரசாரம் செய்தவர் மறியலில்!

கொழும்பு, மார்ச் 26

அடிப்படைவாத பயங்கரவாதிகள் குழுவொன்று அமெரிக்கத் தூதரகம் மற்றும் அதன் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் பிரசாரம் மேற்கொண்டதாகக் கூறப்படும் நபர் ஒருவர் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவினால் கைது செய்யப்பட்ட பத்தரமுல்லைச் சேர்ந்த குறித்த நபர் நேற்று முன் தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

சந்தேக நபர் சமூக ஊடகங்களில் தவறான பிரசாரத்தை மேற்கொண்டுள்ளமை இது வரை நடத்தப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், சந்தேகநபருக்கு மனநலப் பிரச்னை உள்ளதா என்பதைக் கண்டறிய மனநல மருத்துவ அறிக்கையைக் கோருவதற்கான விசாரணை அதிகாரிகளின் கோரிக்கைக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (அ)

# ரூ.36 பில்லியன் சேமலாபநிதி செலுத்தாத நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 26

22 ஆயிரத்து 450 இற்கும் அதிகமான நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பணத்தை வைப்புச் செய்யவில்லை என பிரதிதொழிலமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அதன் பெறுமதி 36 பில்லியன் ரூபாய் என கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாடளாவிய ரீதியில் 22 ஆயித்து 450 இற்கும் மேற்பட்ட அரச, அரச அனுசரணையில் இயங்கும்



நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதியத்துக்கான நிதியைச் செலுத்தவில்லை.

தற்போது 36 பில்லியன் ரூபாய் ஊழியர் சேமலாப நிதியத்துக்குச் செலுத்தவேண்டியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

டிஜிற்றல் அமைச்சுடன் ஒருங்கிணைந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டங்கள் ஊடாக பெரும்பாலான விடயங்களை டிஜிற்றல் மயப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

இதனடிப்படையில் தற்போது நிலவும் பல்வேறு பிரச்னைகள், குறைபாடுகள் நிவர்த்திக்கப்படும்-என்றார். (அ)

# இலங்கைப்படை அதிகாரிகளை அநுர, விஜித பாதுகாப்பார்களா?

## நாமல் ராஜபக்ஷ கேள்வி

கொழும்பு, மார்ச் 26

இலங்கையில் அமைதியை ஏற்படுத்தியவர்களை வெளிநாடுகள் தாக்கும்போது அவர்களை அநுரகுமார திஸாநாயக்கவும் விஜித ஹேரத்தும் பாதுகாப்பார்களா என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-பயங்கரவாதத்தை முற்றாக தோற்கடித்த நாடு இலங்கை. ஆனால் இல ங்கை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நிதி வழங்கி அவர்களின் ஈவிரக்கமற்ற தன்மையை நியாயப்படுத்தியவர்களை புறக்கணித்து தடீப மேற்குலகம் எங்களின் முன்னாள் போர்வீரர்களை தெரிவு செய்து இலக்கு வைக்கின்றது.

பிரிட்டனின் புதிய தடைகள் - மனித உரிமைகள் தொடர்பானது இல்லை, மாறாக அவை நிரந்தர அமைதியை கொண்டு வந்தவர்களிற்கு எதிராக வெளிநாட்டு அரசாங்கங்கள் செயற்படவேண்டும் என்ற விடுதலைப்புலிகள் ஆதரவு இடைவிடாத பரப்புரையின் விளைவே இந்த தடைகள்.

இது நீதியில்லை.சில மேற்குலக அரசியல்வாதிகள் பரப்புரை பணத்தை ஆதரிப்பதன் மூலம் அதன் சலுகைகளை அனுபவிக்கின்றனர்,இதன் மூலம் எங்கள் நாட்டின் நல்லிணக்கத்துக்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றனர்.

நாங்கள் இன்று அனுபவிக்கின்ற சுதந்திரம் கடுமையான நடவடிக்கைகள் மூலமே சாத்தியமானது என்பதை வடக்கின் தெற்கின் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்த தடைகள் எங்கள் படையினரின் மனோநிலையில் பாதிப்பை ஏற்படுத்தும். நாங்கள் தற்போது அவர்களுக்கு ஆதரவளிக்காவிட்டால் மற்றுமொரு நெருக்கடி உருவானால் அவர்கள் போரிடுவதற்கான துணிச்சல் அற்றவர்களாக காணப்படுவார்கள்.

தடைகளுக்கு பின்னால் உள்ளவர்களுக்கு தமிழ் மக்களின் பாதுகாப்பு குறித்து அக்கறையில்லை. அவர்கள் பிரச்னைகளை உருவாக்கி நல்லிணக்கத்துக்கு மேலும் பாதிப்புகளை உருவாக்குகின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை குழப்புவதே அவர்களின் உண்மையான நோக்கம், குறிப்பாக தற்போது வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் தேசிய கட்சிகளுக்கு வாக்களிப்பதற்கான தெளிவான பாதை உள்ளது.

எவரும் சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம்-என்றார். (அ)

# இந்த ஆண்டு வாகனங்களின் விலையில் மாற்றம் இருக்காது!

கொழும்பு, மார்ச் 26

இந்த ஆண்டு வாகன இறக்குமதிக்கான வரி திருத் தங்கள் எதுவும் இருக்காது என ஜனாதிபதியின் மூத்த பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ தெரிவித்துள்ளார்.

அதன்படி, இந்த ஆண்டு சந்தையில் வாகன விலைகளில் எந்த மாற்றமும் இருக்காது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் மூத்த பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ நேற்று முன் தினம் இரவு நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார். (அ)

# ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 26

அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதியானது நேற்று முந்தினத்துடன் ஒப்பிடும் போது நேற்று மேலும் சரிந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ நாணய மாற்று விவரங்களுக்கு அமைவாக,அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான இலங்கை ரூபாவின் கொள்முதல் மற்றும் விற்பனை பெறுமதியானது இன்று முறையே 292.48 ரூபாவாகவும், 301.00.ரூபாவாகவும் உள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகராக இலங்கை ரூபாவின் கொள்முதல் மற்றும் விற்பனை பெறுமதியானது 292.40 ரூபாவாகவும், 300.91 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

வளைகுடா நாணயங்கள் உட்பட ஏனைய பல வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதிக்கு எதிராக இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்று சரிந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கைப் படை அதிகாரிகளுக்கு

# பிரிட்டன் விதித்துள்ள தடைகளை வரவேற்கிறார் கனடா நீதியமைச்சர்

ஒட்டாவா, மார்ச் 26

**இலங்கை அதிகாரிகளுக்கு எதிராக பிரிட்டன் விதித்துள்ள தடைகளை வரவேற்றுள்ள கனடாவின் நீதியமைச்சர் ஹறி ஆனந்தசங்கரி இலங்கையில் பொறுப்புக்கூறலை நோக்கிய மற்றுமொரு முக்கியமான நடவடிக்கை இது என தெரிவித்துள்ளார்.**

எக்ஸ் தளத்தில் இட்டுள்ள பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அதிகாரிகளுக்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதித்துள்ளதை நான் வரவேற்கின்றேன்.

இலங்கையில் பொறுப்புக்கூறலை நோக்கிய மற்றுமொரு முக்கியமான நடவடிக்கை இது.2023 இல் கனடா, மகிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக விதித்த தடைகளை தொடர்ந்து பிரிட்டனும் தடைகளை விதித்துள்ளது.

இலங்கையில் தண்டனையின் பிடியிலிருந்து விடுவிக்கப்படும் கலாச்சாரத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்கும், சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் கனடா தொடர்ந்து பாடுபடும் என ஹறி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். (அ)



# சிறுமியை கடத்திய காதலன் கைதானார்

கொழும்பு, மார்ச் 26

மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெதிகும்புர கஹம்பான பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுமியை கடத்திச் சென்ற 33 வயதுடைய ஒருவர் மொனராகலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் குறித்த சிறுமியுடன் காதல் உறவில் ஈடுபட்டு வந்த நிலையில் சில நாட்களுக்கு முன்பு சிறுமியை எம்பிலிப்பிட்டிய பகுதிக்கு கடத்திச் சென்றுள்ளார்.

இது தொடர்பாக சிறுமியின் தாயார் பொலிஸில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, இருவரும் எம்பிலிபிட்டியவிலிருந்து மொனராகலைக்கு வரும் பஸ்ஸில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபரை மொனராகலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன், சிறுமி வைத்திய பரிசோதனைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ)

# பங்களாதேஷ் பிரஜைகள் கட்டுநாயக்கவில் கைது!

கொழும்பு, மார்ச் 26

ஐரோப்பாவிற்கு தப்பிச் செல்லும் நோக்கில் சட்டவிரோதமாக இலங்கைக்குள் நுழைந்த 10 பங்களாதேஷ் பிரஜைகள் குழு, நேற்று முன்தினம் கட்டுநாயக்கவின் ஆண்டியம்பலம பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்ட இவர்கள் 20 முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர்.

குடிவரவு அதிகாரிகளின் கூற்றுப்படி, இவர்கள் அனைவரும் பெப்ரவரியில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருவதற்கு முன்பு பங்களாதேஷிலிருந்து இந்தியாவுக்குப் பயணம் செய்திருந்தனர்.

வருகை விஸா முறையின் கீழ் பெறப்பட்ட சுற்றுலா விசாக்களில் அவர்கள் இலங்கைக்குள் நுழைந்தனர்.

ஆனால், அனுமதிக்கப்பட்ட காலத்துக்கு அப்பால் அவர்கள் நாட்டில் தங்கியிருந்தனர்.

அதிகாரிகளின் முதற்கட்ட விசாரணைகளில், இந்தக் குழு இலங்கையில் இருந்து டுபாய்க்குப் பயணம் செய்து, பின்னர் எகிப்துக்குள் நுழைந்து, இறுதியில் மத்தியதரைக் கடலைக் கடந்து ஐரோப்பாவை அடைய முயற்சித்ததாக தெரியவந்துள்ளது.

எவ்வாறெனினும், தற்சமயம் கைது செய்யப்பட்டுள்ள இந்தக் குழு வெலிசறை தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தின்படி, நாடு கடத்தல் நடவடிக்கைகள் முடியும் வரை அவர்கள் தடுப்புக்காவலில் இருப்பார்கள் என்று குடிவரவு அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். (அ)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசுக்கு பாடம் புகட்டுவர் மக்கள்!

### கூறுகிறது பொதுஜன பெரமுன

கொழும்பு, மார்ச் 26

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கத்துக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு நாடளாவிய ரீதியில் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளோம்.தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்களில் 263 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பிறப்புச் சான்றிதழின் செல்லுபடி காலம் காரணமாக ஒருசில வேட்புமனுக்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் நீதிமன்றத்தை நாடுவோம்.



2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெருமளவிலான உள்ளூராட்சி அதிகார சபைகளை கைப்பற்றினோம்.அதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் அமோக வெற்றிபெற்றோம்.

இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மீண்டும் கிராமத்தின் அதிகாரத்தை கைப்பற்றுவோம்.தேசிய மக்கள் சக்தி போலியான வாக்குறுதிகள் மற்றும் 75 ஆண்டு கால அரசாங்கங்கள் மீதான வெறுப்பு ஆகியவற்றை முன்னிலைப்படுத்தியே ஆட்சிக்கு வந்தது.

ஜனாதிபதி பதவிக்கு வந்து ஆறு மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் மக்களுக்கு வழங்கிய எந்தவொரு வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தின் பொய்யை மக்கள் தற்போது நன்கு விளங்கிக்கொண்டுள்ளார்கள்.ஆகவே நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கத்துக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்ல விவகாரத்தை அரசாங்கம் தற்போது மறந்து விட்டது.வீட்டை விட்டு வெளியேறுமாறு உத்தியோகபூர்வமாக அறிவித்தால் அவர் நிச்சயம் வீட்டை விட்டு வெளியேறுவார்-என்றார். (அ)

# மகாபொல கொடுப்பனவை தாமதமின்றி மாணவருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 26

மகாபொல உதவித்தொகை பெறுவோருக்கு அந்தக் கொடுப்பனவை தாமதமின்றி வழங்குவது தொடர்பாக எடுக்கக்கூடிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் வைத்தியர் மதுர செனவிரத்ன தலைமையில் இசுருபாய கல்வி அமைச்சின் வளாகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இங்கு, 2025 ஆம் ஆண்டுக்கான முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு மகாபொல கொடுப்பனவு கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்தை குறைக்க எடுக்கக்கூடிய குறுகிய கால நடவடிக்கைகள் மற்றும் ஏனைய ஆண்டு மாணவர்களுக்கு மகாபொல கொடுப்பனவை தாமதமின்றி வழங்குவது தொடர்பாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. மேலும்,

நீண்ட கால திட் டமாக மகாபொல உதவித் தொகை பெறுவோருக்கான கணினிமயமாக்கப்பட்ட தரவு முறையை நவீனமயமாக்குவது தொடர்பாகவும் பிரதி அமைச்சரின் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில சேனவிரத்ன உள்ளிட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அதிகாரிகள் மற்றும் மகாபொல அறக்கட்டளை நிதியத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)

# காதலன் வீட்டுக்கு சென்ற யுவதி சுவர் இடிந்து விழுந்து உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 26

தனது காதலனின் வீட்டுக்குச் சென்றிருந்தபோது, சுவர் இடிந்து விழுந்ததில் காதலி உயிரிழந்துள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர் வாதுவ மொரோந்துடுவ பகுதியைச் சேர்ந்த பிரசாதினி பிரியங்கிகா என்ற 23 வயதுடைய பெண் ஆவார். இறந்த பெண்ணின் காதலன் பாதுகாப்புப் படையில் பணி புரிகிறார். அவர் விடுமுறையில் இருந்த போது தனது பாட்டி அவரைப் பார்க்க விரும்புவதாகக் கூறி அழைத்ததை அடுத்து, காதலி அந்த வீட்டுக்குச் சென்றிருந் தாள்.

வீட்டின் பின்புறம் ஆடுகளை மேய்க்க இளைஞன் சென்றிருந்தபோது, இளம் பெண் வீட்டின் பின்புறம் உள்ள சுவரின் அருகே நின்று கொண்டிருந்தபோது, சுவர் அவரது உடலில் சரிந்து விழுந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# நாடு முழுவதிலும் மூன்று நாள் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

கொழும்பு, மார்ச் 26

நாட்டில் அதிகரித்துள்ள டெங்கு பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சுகாதார அமைச்சின் கீழ் மூன்று நாள் டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் தொடர்பில் சுகாதார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது-இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாடு தழுவிய ரீதியில் 10 ஆயிரத்து 886 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அடையாளம் காணப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை 43.4 வீதமாக குறைவடைந்துள்ளது.

எனினும் நாட்டில் தொடர்ச்சியாக நிலவி வரும் சீரற்ற வானிலை காரணமாக எதிர்வரும் நாட்களில் டெங்கு அபாயம் மேலும் அதிகரிக்கலாம் என வைத்திய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

ஆகையால் நுளம்பு பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சுகாதார அமைச்சின் கீழ் மூன்று நாள் டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

எதிர்வரும் 27, 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது. இதன்போது வீடுகள், பாடசாலைகள், பணியிடங்கள், நிறுவனங்கள், தொழிற்சாலைகள், வழிபாட்டுத் தலங்கள், பொது இடங்கள் மற்றும் ஏனைய பகுதிகளிலும் அதிகாரிகள் குழு கள ஆய்வினை மேற்கொள்ள உள்ளது.

இப்பணியில் சுகாதார ஊழியர்கள், முப்படை அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொள்ள உள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனவிலங்கு மின்சார வேலி தொழிலாளர் ஆர்ப்பாட்டம்




மட்டக்களப்பு, மார்ச் 26

**இலங்கை வனவிலங்கு மின்சார வேலி தொழிலாளர் சங்கத்தினர் "ஜனாதிபதியின் கவனத்துக்கு அமைதி ஊர்வலம்" எனும் தலைப்பில் வேலையை நிரந்தரமாக்குமாறு கோரி நேற்றுமுன் தினம் திங்கட்கி ழமை மட்டக்களப்பு காந்தி பூங்காவில் கவனவீர்ப்பு ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

இலங்கை கனிஷ்ட சேவை யாளர்களின் தொழிலாளர் சங்கம் மற்றும் இலங்கை வனவிலங்கு மின்சார வேலி தொழிலாளர் சங்கத்தின் மட்டு. மாவட்ட தலைவர் இர்பான் தலைமையில் பிரதான பஸ் நிலையத்திலிருந்து மாவட்ட செயலகம் வரை பேரணியாக செல்வதற்கு திட்டமிட்ட நிலையில் தேர்தல் விதிமுறை யில் செல்வதற்கு பொலிஸார் அனுமதி மறுத்ததையடுத்து காந்தி பூங்காவில் வனஜீவராசி கள் திணைக்கள தொழிலாளர் கள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டில் யானைகள் உள் ளிட்ட வனவிலங்குகளை தடுப் பதற்காக அமைக்கப்பட்டுள்ள மின்சார வேலிகளைப் பரா மரிப்பதற்கென நாடு முழுவதும் 4731 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டு தற்போது வரை 3530 உத்தியோகத்தர்கள் மாத்திரமே கடமைபுரிகின் றனர்.

அவர்கள் பணிக்கு அமர்த் தப்பட்டு சுமார் 5 வருடங்கள் ஆகியும் அடிப்படை வசதி யின்றி,

நிரந்தரம் நியமனம் இன்றி இரவு பகலாக மாதாந் தம் 22,500 ரூபாய் பயிற்சி கொடுப்பனவை மாத்திரம் பெற்று கொண்டு கடமை யாற்றி வருவதாகவும் மனித - யானை மோதல்களைக் குறைக்க நாங்களும் பங்களிப் பவர்கள்,

எங்கள் பிரச்னைக்கு ஜனாதிபதியால் மாத்திரமே தீர்வுகாண முடியும்.

நிரந்தர நியமனம் இன்றி கடந்த 4 வரு டங்களாக மாதம் 22, 500 ரூபாய்க்கு நாங்கள் வேலை செய்கின்றோம் என ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்ட வர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கு பொலிஸ் பாதுகாப்பு பலப்ப டுத்தப்பட்டதுடன் தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் இந்த ஆர்ப்பாட்டத்தை கண்காணித்து கொண்டதுடன் சுமார் 2 மணித்தியாலம் ஆர்ப்பாட்டக் காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்று அரசாங்க அதிபரை சந்தித்து மகஜர் ஒன்றை கையளித்தனர். (எ)

# மட்டக்களப்பு - கொழும்பு ரயில் சேவை நேர மாற்றம்

மட்டக்களப்பு, மார்ச் 26

கிழக்கு மாகாண பொது மக்களின் வேண்டுகோளை ஏற்று மீண்டும் மட்டக்களப்பு - கொழும்பு இடையிலான ரயில் சேவை அட்டவணை களில் நேர மாற்றம் செய்யப்பட் டுள்ளது.

கிழக்கு மார்க்கத்துக்கான ரயில் சேவைகளில் தொடர்ச் சியாக காட்டு யானைகள் விபத்துக்குள்ளாகி வருவதைத் தடுக்கும் நோக்கில் கடந்த 7 திகதி முதல் நேர மாற்றம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

காட்டு யானைகள் பாதுகாக்கப்படுகின்ற அதேவேளை, கூடுதலான நேரம் இந்தப் பயணத்தின் போது காணப்படுகின்ற விடயங்களையும் பொதுமக் களின் சிரமங்களையும் பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரவின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இதையடுத்து கிழக்கு மாகாண பொது மக்களின் வேண்டுகோளை ஏற்று மீண்டும் மட்டக்களப்பு - கொழும்பு இடையிலான ரயில் சேவை அட்டவணைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நேர மாற்றமானது நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் புதிய நேர அட்டவணை யின் படி பயணங்கள் மேற் கொள்ளப்படவுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், மட்டக்க ளப்பிலிருந்து அதிகாலை 01.30 மணிக்கு புறப்படும் புலதிசி ரயில் காலை 09.01மணிக்கு கொழும்பு கோட்டையை சென்றடையும்.

கொழும்பி லிருந்து பிற்பகல் 03.15 மணிக்குப் புறப்படும் புலதிசி ரயில் இரவு 10.38 மணிக்கு மட்டக்க ளப்பை அடையும்.

மட்டக்களப்பிலிருந்து இரவு 07. 40 மணிக்கு புறப்படும் மீனகயா ரயில் அதிகாலை 04.16 மணிக்கு கொழும்பு சென்றடையும். கொழும்பிலிருந்து இரவு 11.00 மணிக்குப் புறப்படும் மீனகயா ரயில் காலை 06.45 மணிக்கு மட்டக்களப்பை அடையும்.

மட்டக்களப்பிலிருந்து காலை 06.10 இற்கு புறப்படும் உதயதேவி ரயில் பிற்பகல் 03.00 மணிக்கு கொழும்பு சென்றடையும்.

கொழும்பி லிருந்து காலை 06.05 மணிக் குப் புறப்படும் உதயதேவி ரயில் பிற்பகல் 03.00 மணிக்கு மட்டக்களப்பை வந்தடையும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (எ)

# விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்தி குறித்து ஆராய்வு



கல்முனை, மார்ச் 26

அம்பாறை மாவட்டம், கல் முனை சந்தாங்கேணி விளை யாட்டு மைதான அபிவிருத் திக்காக அரசாங்கத்தால் இந்த ஆண்டு பட்ஜெட்டில் 150 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், அதன் ஆரம்ப கட்ட நடவடிக் கைகள் குறித்து ஆராய்வதற்காக இளைஞர் விவகார, விளை யாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஷெமல் பெர்னாண்டோ, தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் ஏ.ஆதம்பாவா உள்ளிட் டோர் நேற்று முன்தினம் திங் கட்கிழமை அங்கு கண்கா ணிப்பு விஜயம் மேற்கொண் டிருந்தனர்.

அதேவேளை, சாய்ந்தமருது பொலிவேரியன் விளையாட்டு மைதானம் மற்றும் பௌசி விளையாட்டு மைதானம் என் பனவற்றின் நிலைமைகளையும் இவர்கள் பார்வையிட்டனர்.

கடந்த காலங்களில் அபிவி ருத்திப் பணிகள் எதுவும் முன் னெடுக்கப்படாமல் கவனிப் பாரற்ற நிலையில் மிகவும் மோசமாக காணப்பட்ட இந்த விளையாட்டு மைதானங்களை துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து ஆதம்பாவா எம்.பி. இதன்போது விளையாட்டுத் துறை அமைச்சின் பணிப்பாளர் நாயகத்திடம் வலியுறுத்தினார்.

# உலக காசநோய் தினத்தை முன்னிட்டு சம்மாந்துறையில் விசேட கருத்தரங்கு

கல்முனை, மார்ச் 26

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு காசநோய் தடுப்பு குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கல் முனை பிராந்திய மார்பு சிகிச்சை நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்பூட்டல் கருத்தரங்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை அம்பாறை மாவட்டம் சம்மாந்துறையில் அமைந்துள்ள பிராந்திய மார்பு சிகிச்சை நிலையத்தில் நடை பெற்றது.

"ஆம்! எம்மால் காசநோயை முடிவுக்கு கொண்டு வர முடி யும்" அர்ப்பணிப்பு, முதலீடு, வழங்கல் எனும் தொனிப் பொருளில் பிராந்திய மார்பு சிகிச்சைப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எல். அப்துல் கபூர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத் திய கலாநிதி திருமதி சகீலா இஸ்மஉன் பிரதம விருந்தின ராக கலந்து சிறப்பித்தார்.

இதன்போது, சம்மாந்துறை பிரதேச செயலாளர் எல்.எம். எம்.ஹனீபா, கல்முனை வடக்கு ஆதார மருத்துவமனையின் பணிப்பாளர் ஜீ. சுகுணன், சம் மாந்துறை ஆதார மருத்துவம னையின் அத்தியட்சகர் பீ. பிர பாசங்கர், நிந்தவூர் ஆதார மருத் துவமனையின் அத்தியட்சகர் எம். பி. அப்துல் வாஜித், பிராந்திய பிரிவு தலைவர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், மாவட்ட வைத்திய அதிகா ரிகள், பாடசாலை அதிபர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தி யோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண் டனர்.

இக்கருத்தரங்கு நிகழ்வின் போது காசநோய் தொடர் பாகவும் அந்நோய்க்கான அறிகுறிகள், அந்நோயிலிருந்து பாதுகாப்பு பெறுதல், சமூகத் தில் காசநோயை கட்டுப்படுத்த முன்னெடுக்க வேண்டிய நட வடிக்கைகள் தொடர்பாக பிராந்திய பணிப்பாளர், பிராந் திய மார்பு சிகிச்சைப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி ஆகியோர் விளக்கமளித்தனர்.

அதனைத் தொடர்ந்து "ஆம்! எம்மால் காசநோயை முடிவுக்கு கொண்டுவர முடி யும்" எனும் தொனிப் பொரு ளுக்கு நானும் ஆதரவை வழங் குகின்றேன் எனும் கருப்பொ ருளில் கல்முனை பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலையத் தின் வெளிச் சுவரில் கையை முத்து இடும் பலகை திறந்து வைக்கப்பட்டதுடன் நிகழ்வில் கலந்துகொண்ட சகலரும் கையொப்பமிட்டனர்.

உலக காசநோய் தினம் ஒவ் வொரு ஆண்டும் மார்ச் 24ஆம் திகதி அனுஷ்டிக்கப்படு கின் றது. (எ-01)

# தீங்கு விளைவிக்கும் குளிர்பானம் மீட்பு: உற்பத்தியாளருக்கு ரூ. 20,000 அபராதம்

சம்மாந்துறை, மார்ச் 26

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை சுகாதார வைத் திய அதிகாரி காரியாலய எல் லைக்குட்பட்ட பகுதியில் மனித பாவனைக்கு தீங்கு விளைவிக்கும் குளிர்பானங்கள் மீட்கப்பட்டு 20 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் அறவி டப்பட் டது. அத்தோடு, எச்சரிக்கை யையும் செய்யப்பட் டது.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எம். எம். நௌசாத்தின் ஆலோசனையின் பேரில் சம்மாந்துறை 01 பகு திக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் டி. தினே ஷினால் குறித்த குளிர்பானம் கைப்பற்றப்பட்டு அரச பகுப் பாய்வுத் திணைக்களத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தால் குளிர்பானம் தொடர்பான அறிக்கையில் அனுமதிக்கப்படாத நிறமூட் டியையும், அனுமதிக்கப்படாத பாதுகாக்கும் இரசாயனத்தை யும் கொண்டிருப்பது தெரிய வந்தது.

இதனையடுத்து, சம்மாந் துறை நீதிவான் முன்னிலையில் குளிர்பானத்தை விற்பனை செய்த கடை உரிமையாளரும் அதனை உற்பத்தி செய்தவரை யும் முற்படுத்திய போது இரு வருக்கும் எதிராக 20 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் அற விடப்பட்டது. (எ-01)

# 11 பேரைத் தெரிவு செய்ய 112 வேட்பாளர்கள் போட்டி

காரைதீவு, மார்ச் 26

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டம், காரைதீவு பிரதேச சபைக்கு 11 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 112 வேட் பாளர்கள் போட்டியிடவுள் ளனர்.


உள்ளூராட்சித் தேர்தலுக் காக காரைதீவு பிரதேச சபை யின் சார்பில் அம்பாறை மாவட்ட செயலகத்தில் 10 வேட்பு மனுக்கள் சமர்ப்பிக் கப்பட்டன. அவற்றில் ஈழமக் கள் ஜனநாயக கட்சி( ஈ.பி.டி.பி. ) மற்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் இரண்டு வேட்பு மனுக்கள் நிராகரிக் கப்பட்டன.

எட்டு வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள் ளப்பட்டன. அதில் 07 கட்சிக ளும் ஒரு சுயேச்சை குழுவும் களமிறங்குகின்றன.11 உறுப்பி னர்களைத் தெரிவு செய்வதற் காக 07 வட்டாரங்களில் சுமார் 15 ஆயிரம் மக்கள் வாக்களிக்க வுள்ளனர். (எ- 07)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வழிபாட்டு தலம்மீது பீரங்கித் தாக்குதல்!

## சூடானில் துணை இராணுவம் வெறிச்செயல்



கார்டும், மார்ச் 26

**சூடானில் மதவழிபாட்டு தலம் மீது துணை இராணுவப் படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் ஐவர் உயிரிழந்தனர்.**

சூடானில் கடந்த 2021ஆம் ஆண்டு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. இந்த ஆட்சியின் தலைவராக இராணுவத் தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் செயல்பட்டு வருகிறார். அவருக்கு அடுத்த நிலையில் ஆட்சியின் துணைத் தலைவராக துணை இராணுவப் படையின் தளபதியான ஜெனரல் முகமது ஹம்டன் டகலோ செயல்பட்டு வருகிறார்.

இதனிடையே, துணை இராணுவத்தின் படைப்பிரிவுகளில் ஒன்றான அதிவிரைவு ஆதரவுப் படையினரை இராணுவத்துடன் இணைக்க இராணுவத் தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் முயற்சி மேற்கொண்டார். இதற்கு துணை இராணுவப் படையின் அதிவிரைவு ஆதரவு படையினர் தரப்பில் எதிர்ப்பு கிளம்பியது.

இதனால், இராணுவத்துக்கும், துணை இராணுவத்துக்கும் இடையே கடந்த 2023ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி முதல் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. துணை இராணுவத்தின் அதிவிரைவு ஆதரவு படையினர் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். இதற்குப் பதிலடியும் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த மோதலில் அப்பாவி பொதுமக்களும் உயிரிழந்து வருகின்றனர்.

இந்த நிலையில், சூடானின் தலைநகர் கார்டுமில் உள்ள கிழக்கு நிலி மாவட்டத்தில் உள்ள இஸ்லாமிய மத வழிபாட்டுத் தலத்தை குறிவைத்து நேற்று முன்தினம் துணை இராணுவப் படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் ஐவர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர்.

தலைநகர் கார்டுமை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர இராணுவம் தீவிர நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் துணை இராணுவப் படையினர் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர். இதனால், சூடானில் பதற்றம் அதிகரித்துள்ளது. (எ)

## அமெரிக்க தூதரகங்களில் 41 வீத வீசா விண்ணப்பம் நிராகரிப்பு

வாஷிங்டன், மார்ச் 26

உலகம் முழுவதும் செயல்படும் அமெரிக்கத் தூதரகங்களில் கடந்த ஆண்டு 41 சதவீத மாணவர் விசா விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2024ஆம் ஆண்டு புள்ளிவிவரங்களின்படி அமெரிக்காவில் சுமார் 11 இலட்சம் வெளிநாட்டு மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். மிக அதிகபட்சமாக 3. 31 இலட்சம் இந்திய மாணவர்கள் அமெரிக்க கல்வி நிறுவனங்களில் கற்று வருகின்றனர். இதற்கு அடுத்து 2.77 இலட்சம் சீன மாணவர்கள், 43,149 தென்கொரிய மாணவர்கள் அமெரிக்காவில் கல்வி கற்று வருகின்றனர். கனடா, வியட்நாம், தாய்வான், சவுதி அரேபியா, பிரேசில், மெக்சிக்கோ நாடுகளைச் சேர்ந்த மாணவ, மாணவியரும் அமெரிக்காவில் கணிசமாகவுள்ளனர்.

அமெரிக்க கல்வி நிறுவனங்களில் சேர அந்த நாட்டு அரசு சார்பில் எப் 1 விசா வழங்கப்படுகிறது. இந்த விசாவை பெற இந்தியா உட்பட உலகம் முழுவதும் செயல்படும் அமெரிக்கத் தூதரகங்களில் முறைப்படி விண்ணப்பிக்க வேண்டும். இந்த சூழலில் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத வகையில் கடந்த ஆண்டு அமெரிக்கத் தூதரகங்களில் 41 சதவீத மாணவர் விசா விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. (எ)

## எம். பிக்கள் சம்பளம் அதிகரிப்பு

புதுடில்லி, மார்ச் 26

இந்திய பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம், மேலதிக கொடுப்பனவு, ஓய்வூதியம் என்பனவற்றை 2023 ஏப்ரல் முதலாம் திகதி முதல் மத்திய அரசு முன் திகதியிட்டு உயர்த்தியுள்ளது. இதற்கான அறிவிக்கையை பாராளுமன்ற விவகார அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டது. இதன்படி, மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்களின் சம்பளம் - இலங்கை மதிப்பில் சுமார் 347,000 ரூபாயிலிருந்து 430,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. பாராளுமன்றக் கூட்டத்தில் பங்கேற்கும் நாட்களுக்கு வழங்கப்படும் 7000 ரூபாய், 9000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று, முன்னாள் எம்.பிக்களின் ஓய்வூதியம் - இலங்கை மதிப்பில் 87, 000 ரூபாயிலிருந்து 108000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், 5 ஆண்டுகளுக்கு மேல் ஒவ்வொரு ஆண்டு சேவைக்குமான கூடுதல் ஓய்வூதியம் 8,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. எம்.பிக்களின் சம்பளம், ஓய்வூதியம் ஆகியவை இதற்கு முன்பு கடந்த 2018 ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது. (எ)



## இங்கிலாந்தில் மர்ம உயிரினம்!

லண்டன், மார்ச் 26

இங்கிலாந்தில் உள்ள கடற்கரையில் கடல் கன்னி போன்ற மர்ம உயிரினம் ஒன்றை பார்த்த தம்பதி, ஆச்சரியத்தில் ஆழ்ந்து அதுபற்றிய தகவலை பகிர்ந்து கொண்டது.

இங்கிலாந்தில் உள்ள கடற்கரை ஒன்றில் பவுலா மற்றும் தவே ரீகன் தம்பதியர் பொழுது போக்கிக் கொண்டிருந்தனர். அப்போது, கடல் கன்னி போன்ற உருவம் கொண்ட மர்ம உயிரினம், பாதி மணலில் புதைந்த நிலையில் இருந்தது.

வேற்று கிரகவாசியின் உடல் மற்றும் தலையுடன், மீன் வாலுடன் அது காணப்பட்டது. இது பற்றி பவுலா ரீகன் வெளியிட்ட பதிவில், என்னுடைய வாழ்க்கையில் இது போன்ற ஒன்றை நான் பார்த்ததே இல்லை. இது என்னவென்றே என்னால் கூற முடியவில்லை. இது ஒரு விசித்திர உயிரினம்- என்றார். (எ)

## நியூசிலாந்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

வெலிங்டன், மார்ச் 26

நியூசிலாந்தில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் வீடுகள் குலுங்கின. இதனால், மக்கள் அச்சமடைந்தனர்.

நியூசிலாந்தின் கீழ் தெற்கு தீவில் நேற்று அதிகாலை 05.30 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. தெற்கு தீவில் கடலுக்கு அடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6. 8 ஆக இந்த நிலநடுக்கம் பதிவானது.

திடீரென வீடுகள் குலுங்கியதாகவும், வீட்டில் உள்ள பொருட்கள் அதிர்ந்தன என்றும், இதனால் அச்சமடைந்து வீட்டை விட்டு வெளியேறியதாகவும் மக்கள் கூறினர். (எ)

## தொகுதி மறுவரையறையால் இரு அவைகளும் ஒத்திவைப்பு

புதுடில்லி, மார்ச் 26

தொகுதி மறுவரையறை, நீதிபதி வீட்டில் பணம் சிக்கியது உள்ளிட்ட விவகாரங்களால் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டன. கர்நாடகாவில் முஸ்லிம்கள் இடஒதுக்கீடு தொடர்பில் பா.ஜ.க. - காங்கிரஸ் எம்.பிக்கள் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால், பாராளுமன்ற இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

இந்திய பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் 2ஆவது அமர்வு நடைபெற்று வருகிறது. இதில், நேற்று முன்தினம் தொகுதி மறுவரையறை விவகாரம் தொடர்பில் மக்களவையில் விவாதிக்க வேண்டும் என தி.மு.க. எம்.பி. கனிமொழியும், மாநிலங்களவையில் விவாதிக்கக் கோரி தி.மு.க. எம்.பி. வில்சனும் நோட்டீஸ் கொடுத்தனர். இந்த நிலையில், அனைத்து நிகழ்வுகளையும் ஒத்திவைத்துவிட்டு, தொகுதி மறுவரையறை குறித்து விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தி மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பிக்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், கர்நாடகாவில் மத அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கப்படுவதாக கண்டனம் தெரிவித்து பா.ஜ.கவினர் குரல் எழுப்பினர்.

கர்நாடகாவில் அரசு ஒப்பந்த பணிகளில் முஸ்லிம்களுக்கு 4 வீத இடஒதுக்கீடு வழங்குவதற்கு ஏற்ப அரசமைப்பில் திருத்தம் செய்யப்படும் என்று துணை முதல்வர் டி.கே.சிவக்குமார் பேசியதாக கூறி மாநிலங்களவையில் காங்கிரஸ் கட்சி மீது பா.ஜ.க.வினர் குற்றஞ்சாட்டினர். இவ்வாறு, இரு அவைகளில் அமளி ஏற்பட்டதால் இரு அவைகளும் ஒத்தி வைக்கப்பட்டன. (எ)

## காஸா மருத்துவமனையின்மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்

காஸா, மார்ச் 26

காஸாவில் உள்ள மிகப்பெரிய மருத்துவமனைமீது இஸ்ரேல் இராணுவம் பயங்கரத் தாக்குதல் நடத்தியுள்ளது.

காஸாவுக்கு எதிரான முதல் கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் நீடிக்கப்படுவதற்கான சாத்தியம் காணப்படாத சூழலில், காஸா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. கடந்த 18ஆம் திகதி காஸாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 400இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

தொடர்ந்து காஸா முனையின் கான் யூனிஸ், ரபா உட்பட பல்வேறு பகுதிகளில் கடந்த 22 ஆம் திகதி இஸ்ரேல் அதிரடி வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில், 20இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும், இந்தத் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் மூத்த தலைவர் சலாஹ் அல்-[illegible] வில் கொல்லப்பட்டார்.

இந்த நிலையில், தெற்கு காஸாவில் உள்ள மிகப்பெரிய மருத்துவமனையான நாசர் மருத்துவமனைமீது இஸ்ரேல் இராணுவம் நேற்று முன்தினம் பயங்கரத் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்த நிலையில், பலர் படுகாயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மருத்துவமனையில் [illegible] வர்கள் பதுங்கி இருந்ததாகவும், அவர்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் உயிரிழப்புக்கு ஹமாஸ் அமைப்பினரே காரணம் எனவும், மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதிகளில் அவர்கள் இயங்கி வருவதால் தாக்குதலின்போது அதிக உயிரிழப்புகள் ஏற்படுவதாகவும் இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது.

நாசர் மருத்துவமனை உட்பட, காஸா முழுவதும் உள்ள பல்வேறு மருத்துவமனை கட்டடங்கள் இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதல்களால் சேதமடைந்துள்ளன. இதுவரை இஸ்ரேல் - காஸா போரில் சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசுதோஷ் அதிரடி ஆட்டம் டில்லி அணி அபார வெற்றி



விசாகப்பட்டினம், மார்ச் 26

அசுதோஷின் அதிரடி ஆட்டம் மூலம் டில்லி அணி அபார வெற்றி பெற்றது.


18ஆவது ஐ. பி. எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில், 3ஆவது நாளான நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற 4ஆவது லீக் ஆட்டத்தில் டில்லி கப்பிட்டல்ஸ் - லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்களை இழந்து 209 ஓட்டங்கள் அடித்தது. அதிகபட்சமாக நிக்கோலஸ் பூரன் 75 ஓட்டங்களும், மிட்செல் மார்ஷ் 72 ஓட்டங்களும் எடுத்தனர். டில்லி தரப்பில் ஸ்டார்க் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 210 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி களமிறங்கிய டில்லி அணிக்கு முதல் ஓவரிலேயே ஜேக் பிரெசர் மெக்கர்க், அபிஷேக் போரல் ஆகியோரின் விக்கெட்களை வீழ்த்தி லக்னோ பந்துவீச்சாளர் ஷர்துல் தாகூர் அதிர்ச்சி கொடுத்தார். அடுத்து வந்த சமீர் ரிஸ்வியும் நிலைக்கவில்லை. அவர் 4 ஓட்டங்களில் நடையை கட்டினார். விக்கெட்களை இழந்தாலும் டில்லி அணி ஆரம்பம் முதல் அதிரடியாகவே விளையாடியது. இருப்பினும், சீரான இடைவெளியில் விக்கெட்களையும் இழந்து தடுமாறியது.

ஒரு கட்டத்தில் லக்னோ அணி வெற்றி பெறுவது போல் தெரிந்தது. இருப்பினும், ஸ்டப்ஸ் 34 ஓட்டங்கள் (22 பந்துகள்), விப்ராஜ் நிகாம் 39 ஓட்டங்கள் (15 பந்துகள்) என விரைவாக அடிக்க ஆட்டத்தில் திருப்புமுனை ஏற்பட்டது. இவர்கள் ஆட்டமிழந்தாலும் அசுதோஷ் சர்மா நிலைத்து விளையாடி டில்லி அணிக்கு வெற்றியை பெற்றுக்கொடுத்தார்.

கடைசி ஓவரில் டில்லியின் வெற்றிக்கு 6 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் கைவசம் ஒரு விக்கெட் மட்டுமே இருந்தது. இதனால், ஆட்டத்தில் பரபரப்பு தொற்றிக்கொண்டது. இதில் முதல் 2 பந்துகளில் மொஹித் சர்மா ஓர் ஓட்டம் அடிக்க, 3ஆவது பந்தில் சிக்ஸர் விளாசி அசுதோஷ் சர்மா ஆட்டத்தை முடித்து வைத்தார்.

19. 3 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்த டில்லி அணி 211 ஓட்டங்கள் அடித்து ஒரு விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. இந்த வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்த அசுதோஷ் சர்மா 66 ஓட்டங்களுடன் இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். லக்னோ தரப்பில் ஷர்துல் தாகூர், சித்தார்த், திக்வேஷ் ரதி மற்றும் பிஷ்னோய் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். (எ)



# ரோஹித் சர்மாவின் மோசமான சாதனை

சென்னை, மார்ச் 26

ஐ.பி.எல். வரலாற்றில் அதிக முறை ஓட்டமின்றி ஆட்டமிழந்து ரோஹித் சர்மா மோசமான சாதனை படைத்துள்ளார்.

சென்னையில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற 3ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை - மும்பை அணிகள் மோதின. இதில், நான்கு பத்துகளை எதிர்கொண்ட ரோஹித் சர்மா ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

ஐ.பி.எல். வரலாற்றில் அதிக முறை, அதாவது 18 முறை (டக் அவுட்) ஓட்டமின்றி ஆட்டமிழந்த வீரர் என்ற மோசமான சாதனையை ரோஹித் சர்மா சமன் செய்துள்ளார்.

மெக்ஸ்வெல், தினேஷ் கார்த்திக் ஆகியோரும் அதிக முறை (18) ஓட்டமின்றி ஆட்டமிழந்துள்ளனர். (எ)



# மியாமி ஓபின் ரென்னிஸ்: சபலெங்கா முன்னேற்றம்

மியாமி, மார்ச் 26

மியாமி ஓபின் ரென்னிஸ் தொடரில் அரினா சபலெங்கா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள மியாமி ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 4 ஆவது சுற்று (காலிறுதிக்கு முந்தைய சுற்று) ஆட்டம் ஒன்றில் பெலாரஸின் அரினா சபலெங்கா, அமெரிக்காவின் டேனியல் காலின்ஸூடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சபலெங்கா 6-4 மற்றும் 6-4 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார். (எ)

# ஜோகோவிச் வெற்றி

புளோரிடா, மார்ச் 26

மியாமி ஓபின் ரென்னிஸ் தொடரில் ஜோகோவிச் 4ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இந்த சர்வதேச ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் செர்பியாவின் முன்னணி வீரரான ஜோகோவிச், ஆர்ஜென்ரீனாவில் கமிலோ யூகோ காரபெல்லியுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோகோவிச் 6-1, 7-6 (6-1) என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)



# நியூசிலாந்து அணி அறிவிப்பு

வெலிங்டன், மார்ச் 26

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்கும் நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ரி - 20 மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில், முதலில் இவ்விரு அணிகளுக்கும் இடையே ரி - 20 தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடர் முடிவடைந்தவுடன் ஒருநாள் தொடர் தொடங்குகிறது.

இதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதல் ஒருநாள் போட்டி எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த நிலையில் இந்தத் தொடருக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ரொம் லேதம் (தலைவர்), முகமது அப்பாஸ், ஆதி அசோக், மைக்கல் பிரேஸ்வெல், மார்க் சப்மேன், ஜேக்கப் டபி, மிட்ச் ஹே, நிக் கெல்லி, டேரில் மிட்செல், வில் ஓ“ரூர்க், பென் சியர்ஸ், நாதன் சுமித், வில் யங் ஆகியோர் அணியில் இடம்பிடித்துள்ளனர். (எ)

# உலகக் கிண்ண உதைபந்தாட்டம்; நியூசிலாந்து அணி தகுதி பெற்றது

ஆக்லாந்து, மார்ச் 26

2026 உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடருக்கான தகுதி சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில், நியூசிலாந்து அணி தகுதி பெற்றுள்ளது.

23ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடர் கனடா, மெக்சிக்கோ, அமெரிக்காவில் அடுத்த ஆண்டு (2026ஆம் ஆண்டு) நடைபெறவுள்ளது. மொத்தம் 48 அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரில் போட்டியை நடத்தும் 3 நாடுகள் தவிர மற்ற அணிகள் தகுதிச் சுற்று மூலமே தெரிவு செய்யப்படும். இதற்கான தகுதி சுற்று ஆட்டங்கள் கண்டங்கள் வாரியாக நடைபெற்று வருகின்றன.

இதில் ஓசியானா கூட்டமைப்பு அணிகளுக்கான தகுதி சுற்றின் 3ஆவது பிரிவு இறுதி ஆட்டத்தில் நியூசிலாந்து - நியூ கலிடோனியா அணிகள் நேற்று மோதின. இந்த ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 3-0 என்ற கோல்



கணக்கில் வெற்றி பெற்றதுடன் உலகக் கிண்ணத் தொடருக்கும் தகுதி பெற்று அசத்தியது. (எ)

# யூகி பாம்ப்ரி ஜோடி வெற்றி

புளோரிடா, மார்ச் 26

மியாமி ஓபின் ரென்னிஸ் தொடரில் யூகி பாம்ப்ரி ஜோடி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

மியாமி ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவின் புளோரிடா நகரில் நடைபெற்று வருகிறது. இதில் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

இதில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் யூகி பாம்ப்ரி - போர்த்துக்களில் நுனோ போர்ஜஸ் ஜோடி, இந்தியாவின் ரோகன் போபண்ணா - குரோசியாவின் இவான் டோடிக் ஜோடியுடன் மோதியது.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய யூகி பாம்ப்ரி ஜோடி 6-4 , 3-6 ,10-7 என வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

அவருடன் இணைந்து தமிழ்நாட்டு மீனவர்களின் ஆறு பிரதிநிதிகள் இந்தப் பேச்சில் பங்கேற்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை மீனவர்கள் சார்பில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த சுப்பிரமணியம், இராமச்சந்திரன், அன்னராசா, வர்ணகுலசிங்கம், முல் லைத்தீவை சேர்ந்த மரியராசா, மன் னாரை சேர்ந்த ஆலம், சங்கர், கிளி நொச்சியை சேர்ந்த பிரான்சிஸ், அந் தோனிப்பிள்ளை ஆகியோர் கொண்ட 12 பேர் குழு இந்தப் பேச்சில் பங்கேற்கும்.

தமிழக மீனவர்கள் முதல் கட்டமாக ஒரு மாத காலம் இலங்கை கடற்பரப்புக்குள் இழுவை மடி மீன்பிடியை நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த சந்திப்பு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(அ - ஐ)

## தென்னக்கோனை...

பொலிஸ் மா அதிபர் தென்னக்கோனை பதவியிலிருந்து நீக்குமாறு கோரி தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் 115 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் பிரேரணையை சபாநாயகரிடம் கையளித்துள்ளோம்.

மோசடி பற்றிய குற்றச்சாட்டு, அதிகாரத்தை மிகமோசமான முறையில் துஷ்பிரயோகம் செய்துள்ளமை, கடமையை செய்ய தவறியமை, பதவி காலத்தில் பக்கசார்பாக செயல்பட்டமை ஆகிய காரணங்களை அடிப்படையாகக் கொண்டே நாம் சபாநாயகரிடம் பிரேரணையை முன்வைத்துள்ளோம்.

சபாநாயகர் சார்பாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கிறோம். எதிர்வரும் ஏப்ரல் 8ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்போது இந்தப் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் - என்றார்.

இதேவேளை, தென்னக்கோன் கைது செய்யப்பட்டு எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மோசமான...

கூறினார்.

மேலும், "வரவு- செலவுத் திட்ட கூட்டத்தொடர் முடிவடைந்துள்ள நிலையில் யாழ். மாவட்டத்துக்கு பாதீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு தொடர்பில் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பதற்காகவே இன்றைய (நேற்றைய) ஒருங்கிணைப் புக்குழு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தது.

மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடப்படவிருந்த இக்கூட்டத்தில் சிவபூசையில் கரடி புகுந்தது போல சம்பவங்களும் இடம்பெற்றன. தொல்லை தாங்க முடியாமல் எம். பியொருவர் வெளியேறி சென்றுள்ளார். மேலும் சில அதிகாரிகள் மனஉளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.

எவருடைய பேச்சுக்கும் கட்டுப்படாத நபரொருவரால்தான் இப்படி நடந்தது. பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மோசமாக நடந்துகொண்டார். தனக்குள்ள தனிப்பட்ட பிரச்னை காரணமாக சம்பந்தமில்லாத விடயங்களைக்கூட அவர் குறிப்பிட்டுள்ளார். எத்தடை வரினும் யாழ். மாவட்டத்துக்குரிய அபிவிருத்தி திட்டங்கள் தொடரும். அவை உரிய வகையில் முன்னெடுக்கப்படும். ஒருங்கிணைப்புக் குழு தலைவருக்குள்ள அதிகாரம் இனி முழுமையாக பயன்படுத்தப்படும். சம்பவம் தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வரும். நாம் இதுபற்றி மக்களிடமே முறையிடுகின்றோம். அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்." - என்றார். (ஐ)

## ஹெரோயினுடன்...

யாழ்ப்பாணம் போதைப்பொருள் தடுப்பு பொலிஸார் இணைந்து மேற் கொண்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடமிருந்து 325 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஐ)

## இலங்கை - சீன...

நட்புறவு சங்கத்தின் தலைவராக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரி வானார். இந்த நிலையில், இலங்கை - சீன பாராளுமன்ற நட்புறவு சங்கத்தை மீள நிறுவுவதற்கான கூட்டத்தில் பங்கேற்றபோதே சீனத் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நட்புறவு சங்கத்தின் ஊடாக இரண்டு நாடுகளும் பரஸ்பரம் அக்கறை செலுத்தும் துறைகளை வலுப்படுத்துவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார். (ஐ)

## தர்ம சாஸ்தா...

அழைக்கப்பட்டார்.

அவரின் மறைவு தொடர்பில் இந்துக் குருமார் அமைப்பு வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பில், "எமது விப்ரசிரேஷ்டராக, அந்தணர்களின் உயர்வுக்கு குருகுல கல்வி முதல் பல்வேறு வழிகளில் பங்காற்றிய பெருந்தகை இன்று சிவபதமடைந்தார் என அறிந்து மிகவும் கவலை அடைந்தோம்.

"பல்மொழி ஆளுமை மிக்கவராக, அன்புடன் அனை வரையும் அரவணைக்கும் பண்பாளராக திகழ்ந்தவர். யார் எந்த உதவி கேட்டாலும் உடனே தயங்காமல் வழிவகுப்பார். ஓர் ஆசான் எப்படி வாழ வேண்டும் என முன்னுதாரணமாக வாழ்ந்தவர். இந்தியாவில் உள்ள ஆதீனங்கள், குருகுல அதிபர்கள் உள்ளிட்ட பெரியோரது அன்புக்கும் மரியாதைக்கும் போற்றுதலுக்கும் உரியவராக திகழ்ந்தவர்.

"யாவரும் இறை நியதியை ஏற்க வேண்டிய சூழ்நிலை. அமரரின் ஆத்ம சிவப்பிராப்திக்கு அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்கிறோம்", என்றுள்ளது. (ஐ)

## யாழ்....

முடியாத நிலையில் கூட்டத்துக்கு தலைமை தாங்கிய அமைச்சர் இ. சந்திரசேகர் கூட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் அந்தக் குழுவின் தலைவர் அமைச்சர் இ. சந்திரசேகர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வலி. வடக்கு மின்சார இணைப்பு தொடர்பாக பேசப்பட்டபோது பாராளுமன்ற உறுப்பினர்களான அர்ச்சுனாவுக்கும் இளங்குமரனுக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டது. இருவரும் தனிப்பட்ட விடயங்களை சபையில் முன்வைத்து ஒருவரை ஒருவர் சாடினர். இதன்போது, ஒருவர் மீது ஒருவர் அநாகரிக பேச்சுகளையும் பயன்படுத்தினர்.

இருவரையும் அமைதிப்படுத்த அமைச்சர் கடுமையாக முயன்றார். அது முடியாதுபோகவே ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தை இடைநிறுத்துவதாக அவர் அறிவித்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலும் அர்ச்சுனாவும் பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவரான ஜெ. ரஜீவனும் அரசியல் ரீதியான நக்கல் நையாண்டித்தனங்களில் ஈடுபட்டனர். இதனால், ஆத்திரமடைந்த பொதுமக்கள் விசனம் வெளியிட்டதைத் தொடர்ந்து கூட்டம் ஒழுங்குமுறையாக நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புதிய அரசமைப்பை விரைவுபடுத்துங்கள்

## கரு ஜயசூரிய தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 26

இனங்களுக்கு இடையிலான நம்பிக்கையின்மை விரைவில் களையப்பட வேண்டும். இன நல்லிணக்கம், புதிய அரசமைப்பு தொடர்பில் தற்போதைய அரசாங்கம் கதைத்து வருகிறது. இதற்குரிய பணிகள் விரைவில் செய்யப்பட்டால் நல்லது - இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

டி. எஸ். சேனாநாயக்கவின் 73 ஆவது நினைவு தின நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பல நாடுகளில் உயிர் தியாகம் செய்தே சுதந்திரம் பெற்றனர். எமக்கு இலகுவில் சுதந்திரம் கிடைக்கப் பெற்றதால் சுதந்திரத்தின் பெறுமதி எமக்கு சரியாக புரியவில்லை. அதனால் தான் இனங்களுக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டு நாடு பின்நோக்கி சென்றது.

எனினும், அண்மையில் ஏற்பட்ட இளைஞர்களின் எழுச்சியின்போது இளைஞர்கள் இன, மத, குல பேதங்களை முழுமையாக நிராகரித்தனர். காலிமுகத்திடல் மற்றும் ஏனைய இடங்களில் இதனை கண்டோம்.

பாராளுமன்றத்தில் இன்றுள்ள கட்சிகள் இனவாதத்தை நிராகரித்துள்ளன. இது வரவேற்ககூடிய விடயமாகும். இதனை தொடர்ந்து முன்னோக்கி கொண்டுசெல்ல வேண்டும். இனங்களுக்கு இடையிலான நம்பிக்கையின்மை இந்த தலைமுறையுடன் முடிவுக்கு வரவேண்டும். அடுத்த தலைமுறைக்கு செல்லக்கூடாது.

இனங்களுக்கு இடையில் பிரச்னையை ஏற்படுத்துவதற்கு சிறு குழு ஒன்று முயற்சித்தாலும் அது வெற்றியளிக்காது. அன்று அனைத்து இன மக்களும் ஒன்றாக கல்வி பயின்றனர், ஒன்றாக விளையாட்டுகளில் ஈடுபட்டனர். 1960களில்தான் இந்நிலைமை மாறுபட்டது. இன, மத ரீதியாக மாணவர்கள் பிளவுபட்டனர் - என்றார்.

(ஐ)

# யாழ். பல்கலைக்கழகத்தில் நாளை சர்வதேச மாநாடு!

யாழ்ப்பாணம், மார்ச் 26

தூய சக்தி மற்றும் சுகாதார பயன்பாடுகளுக்கான மேம்பட்ட விடயங்கள் குறித்த சர்வதேச மாநாடு நாளை வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் கைலாசபதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தூய்மையான சக்தி மற்றும் சுகாதார பயன்பாடுகளுக்கான விடயங்கள் தொடர்பில் பணிபுரியும் சர்வதேச ஆராய்ச்சியாளர்களிடையே தொழில்நுட்பத்துடனான அறிவியல் அறிவைப் பரிமாறிக் கொள்வதற்கான ஒரு முக்கிய தளமாக இந்த மாநாடு நடைபெறுகிறது.

இந்த மாநாட்டின் கருப்பொருள், தூய்மையான எரிசக்தி மற்றும் சுகாதார பயன்பாடுகளுக்கான "நானோ" பொருட்களின் திறனைப் பயன்படுத்துவதில் உள்ள சவால்களை நிவர்த்தி செய்வதற்காக உருவாக்கப்பட்டது.

அதேநேரத்தில் ஆராய்ச்சியாளர்கள் துறை தொடர்பான அர்த்தமுள்ள விவாதங்கள் மற்றும் ஒத்துழைப்புகளில் ஈடுபடுவதற்கான ஒரு மாறுபட்ட மன்றத்தையும் வளர்ப்பதற்குரிய உருவாக்கத்தையும் கொண்டிருக்கும் . சூரிய ஆற்றல், ஐதரசன் ஆற்றல், மாதிரி செயல்பாடுகள், சுத்தமான எரிசக்தி, சுகாதார பயன்பாடுகளுக்கான உருவகப்படுத்துதல், செயற்கை நுண்ணறிவு, சுகாதார பயனபாடுகளுக்கான பொருட்கள், அவை தொடர்பான மேம்பட்ட செயல்பாட்டுப் பொருட்கள், பொறுப்பான ஆராய்ச்சி, அவை தொடர்பான கண்டுபிடிப்புகள், ஆற்றல், சுற்றுச்சூழல், சுகாதாரம் ஆகிய ஆறு கருப்பொருட் பகுதிகளைச் சுற்றி இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

## அதீத...

குறித்த இளைஞர், கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பனின் வீட்டுக்கு சென்று உறங்கியுள்ளார். மறுநாள் திங்கட்கிழமை அவர் மயக்கநிலையில் கிடந்துள்ளார்.

அவர் உடனடியாக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இளைஞரின் மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். ஊசி மூலம் அதிகளவான ஹெரோயினை உட்செலுத்தியமையாலேயே மரணம் சம்பவித்ததாக உடற்கூற்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-02-05)

## ஜனாதிபதி...

பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன், "காங்கேசன்துறையில் அமைந்துள்ள ஜனா திபதி மாளிகையை விடு விப்பதற்கு பொருத் தமான திட்ட

முன்மொழிவை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியால் கோரப்பட்டுள்ளது. இதற்கமைய ஜனாதிபதி மாளிகைக்கான காணியை சுவீகரிப்பதற்கான நடவடிக்கையை தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்னெடுத்து வருகிறது.

எனவே, காங்கேசன்துறையில் உள்ள ஜனாதிபதி மாளிகையை முறையான அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கு பொருத்தமான திட்ட முன்மொழிவை சமர்ப்பிக்க வேண்டும்", என்று கோரினர். (ஐ)

# கசிப்பு காய்ச்சியவர் கிளிநொச்சியில் கைது!

கிளிநொச்சி, மார்ச் 26

கிளிநொச்சியில் சூட்சுமமான முறையில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இரத்தினபுரம் பகுதியில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையமே இவ்வாறு முற்றுகையிடப்பட்டது.

இந்த முற்றுகையின்போது, சந்தேக நபரிடமிருந்து 380 லீற்றர் கோடா, 20 லீற்றர் கசிப்பு, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கூட்டத்திலிருந்து...

இதன்போது, இருவரும் தனிப்பட்ட விடயங்களை முன்னிறுத்தி தர்க்கப்பட்டனர்.

இருவரையும் கட்டுப்படுத்தி கூட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு சிறீதரன் எம். பி. இதன்போது கோரினார். ஆனால், ஒருங்கிணைப்புக் குழு தலைவரால் அவர்களை கட்டுப்படுத்த முடியவில்லை. கூட்டத்தில் மேலும் கூச்சல் குழப்பங்கள் அதிகரிக்கவே தான் கூட்டத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்துவிட்டு சிறீதரன் எம். பி. வெளியேறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பிரிட்டனின் தடையை அரசு எதிர்க்கவேண்டும்

## சரத் வீரசேகர வலியுறுத்தல்



கொழும்பு, மார்ச் 26

**முன்னாள் படைத்தளபதிகள் மற்றும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோருக்கு பிரித்தானியா விதித்துள்ள தடைக்கு அரசாங்கம் எதிர்ப்பை வெளியிடவேண்டும் என பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பினபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பாதுகாப்புப் படைகளின் முன்னாள் பிரதானி சவேந்திர சில்வா, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய மற்றும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோருக்கு பிரித்தா னியா தடை விதித்துள்ளது.

கடுமையான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட தாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் சர்வதேச வலையமைப்பு இலண்டனில் இயங்குகிறது. அந்த அமைப்புக்கு அவர்கள் பாதுகாப்பு வழங்குகிறார்கள்.

யுத்த காலத்தில் நாட்டிலிருந்து தப்பிச்சென்ற விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஏராளமானோர் இலண்டனிலேயே வசிக்கிறார்கள். அவர்கள் வசதி படைத்தவர்கள் என்பதாலும் வாக்குகள் அவசியம் என்பதற்காகவும் பிரித்தானிய அரசாங்கத்தை வலியுறுத்தி இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்கள்.

ஆகவே, பயங்கரவாதத்தை ஒழித்தவர்களுக்கு எதிராக பிரித்தானியா செயற்பட்டுள்ளமை முற்று முழுதாக தவறானது. இதனைக் கண்டித்து அரசாங்கம் தனது எதிர்ப்பை வெளியிட வேண்டும்-என்றார். (அ)

# பயங்கரவாதத்துக்கு ஆதரவாக செயல்பட்டுவருகிறது மேற்குலகு

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 26

பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் நோக்கில் மேற்குலக நாடுகள் செயற்பட்டு வருவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் யுத்தம் இடம்பெற்றபோது விடுதலைப் புலிகள் என்ற உலகின் மிகப்பெரிய பயங்கரவாத அமைப்பை நமது இராணுவத்தினரே ஒழித்தார்கள். விடுதலைப் புலிகளே மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார்கள்.ஆயினும் பயங்கரவாதத்துக்கு புத்துயிர் அளிக்கும் நடவடிக்கை யில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் செயற்படுகின்றன.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது புலிகளின் தலைவர்களையும் முக்கியஸ்தர்களையும் அழைத்துச் செல்வதற்காக அமெரிக்க கப்பல் இலங்கைக்கு வந்தது. வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலர் நாட்டுக்கு வருகை தந்து அரசாங்கத்துக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க முயற்சித்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் அப்போதைய பொதுச் செயலாளர் பான் கீ மூன் வருகை தரவிருந்தார். எனினும் அன்றிருந்த அரச தலைவரால் சாணக்கியமாக இந்த விடயங்கள் முறியடிக்கப்பட்டன.இப்போது பயங்கரவா தத்துக்கு வெள்ளைச் சாயம் பூசும் முயற்சியில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இயங்கி வருகின்றன்-என்றார். (அ)

# அரச வைத்தியசாலைகளில் சிறுநீரக விற்பனை மோசடி!

கொழும்பு, மார்ச் 26

சில அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் சிறுநீரக விற்பனை மோசடி இடம்பெறுவதாகச் சுகாதாரத் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்கள் சங்க கூட்டமைப்பின் தலைவர் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ இதனைத் தெரிவித்தார்.இதன்படி சில விசேட வைத்தியர்களின் உதவியுடன் பெறப்பட்ட சிறுநீரகம் 4 மில்லியன் ரூபா வரை விற் பனை செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மஹரகம அபேக்ஷா மருத்துவ மனையில் பழுதடைந்த கதிரியக்க இயந்திரங்கள் இன்னும் சரி செய்யப்படவில்லை என்று அரச கதிரியக்க தொழில் நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# தேசபந்துக்கு எதிரான முன்மொழிவு ஐக்கிய மக்கள் சக்தி பூரண ஆதரவு!

கொழும்பு, மார்ச் 26

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை அவரது பதவியில் இருந்து நீக்கும் அரசாங்கத்தின் முன்மொழிவுக்கு ஐக்கிய மக்கள் சக்தி முழு ஆதரவையும் தெரிவித்துள்ளது.

இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிராக அரசாங்கம் நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்துள்ளதாகவும், அதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசியலமைப்புச் சபையில் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக வாக்களித்ததைத் தடுக்க, முந்தைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில்தான் ஐக்கிய மக்கள் சக்தி முதன்முதலில் நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பை மீறி தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டதாகவும், இந்த அரசியலமைப்பு மீறலுக்கு முன்னாள் ஜனாதிபதி மட்டுமல்ல, சபாநாயகரும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.மேலும் அதற்கு தனது கட்சியின் முழு ஆதரவையும் மீண்டும் வலியுறுத்தினார். (அ)

# "பிரிட்டன் தடையால் எனக்கு பாதிப்பில்லை"

## சொல்கிறார் கருணா அம்மான்



கொழும்பு, மார்ச் 26

பிரிட்டன் விதித்திருக்கும் தடையால் தனது அரசியலுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான் ) தெரிவித்தார்.

இந்த தடை தொடர்பில் அவரிடம் வினவியபோது இப்படித் தெரிவித்த அவர் , தான் எந்தவித மனித உரிமை மீறலிலும் ஈடுபடவில்லை யெனவும் கூறினார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-நான் மனித உரிமை மீறல்களில் ஈடுப டவில்லை.அதனால் இந்தத் தடை என் னைப் பாதிக்காது.எனது அரசியலையும் பாதிக்காது.நான் அப்படியெல்லாம் செயற்பட்டிருந்தால் நான் அங்கு தஞ்சமடைந்த காலப்பகுதியில் பிரிட்டன் என்னைக் கைது செய்திருக்கலாமே? ஏன் என்னைப் பத்திரமாக திருப்பி அனுப்பவேண்டும்? அப்போது இவையெல்லாம் தெரியவில்லையா? இவற்றைப்பற்றி நான் அலட்டிக் கொள்ளப்போவதில்லை - என்றார். (அ)

# பிரிவினைவாத புலம்பெயர்ந்தோர் விடாமுயற்சியுடனேயே உள்ளனர்!

## பிரிட்டனின் தடை குறித்து அலி சப்ரி

கொழும்பு, மார்ச் 26

பிரிவினைவாத புலம்பெயர்ந்தோர் முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கு மிகவும் சுறுசுறுப்பா கவும், மூலோபாயரீதியாகவும், விடாமுயற்சியுடனும் உள்ளனர் என்பதை பிரிட்டனின் தடை அறிவிப்புகள் வெளிப்படுத்துவதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்

பிரிட்டன் இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் கருணா அம்மானுக்கு எதிராக விதித்துள்ள தடைகள் குறித்த தனது சமூக ஊடக பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-

ஐக்கிய இராச்சியம் எங்கள் யுத்த வெற்றி வீரர்களுக்கு எதிராக தடைகளை விதித்துள்ளது.

இந்த விடயங்கள் எவையும் வெற்றிடத்தில் நிகழவில்லை. பிரிவினைவாத புலம்பெயர்ந்தோர் முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கு மிகவும் சுறுசுறுப் பாகவும், மூலோபாய ரீதியாகவும், விடாமுயற்சியுட னும் உள்ளனர்.

எங்களின் அரசியல்வாதிகள் சுயவிருப்பத்துடனோ அல்லது அறியாமையினாலோ அல்லது திட்டமிட்டோ அவர்களின் கரங்களில் சிக்கிக்கொள்வது வருந்தத்தக்க விடயம்.

உலகின் மிகக்கொடுரமான பயங்கரவாத அமைப்புகளில் ஒன்றை தோற்கடித்து, பல தசாப்தங்களாக இரத்தக் களறியை எதிர் கொண்ட எமது தேசத்திற்கு அமைதியையும் ஸ்திரத்தன்மையையும், கொண்டுவரு வதற்கு பொறுப்பானவர்களின் பாதுகாப்பையும் கண்ணியத்தையும் அரசியல் நோக்கத்துக்காக இலாபத்துக்காக ஆபத்தான முறையில் சமரசம் செய்து வருகின்றோம் என்பது எனக்கு உண்மையிலேயே கவலையளிக்கின்றது.

ஐக்கியம் சுதந்திரத்துக்காக செய்யப்பட்ட தியாகங்களை மறந்தால் அது எவ்வளவு தூரம் நன்றி கெட்ட தேசமாக இருக்கமுடியும்?

இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடாகவே விளங்கவேண்டும். இதில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை.

எங்கள் நாட்டின் இறைமை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டை பேணுவதற்கான எங்கள் அர்ப்பணிப்பு உறுதியானதாகயிருக்க வேண்டும்.

அனைத்து இலங்கையர்களும் இன மதமொழி பேதமின்றிக் கௌரவம் சமத்துவத்துடன் பரஸ்பர கௌரவத்துடன் வாழும் நாட்டை கட்டியெழுப்பும் அதே வேளை வெளிப்படையான அல்லது நயவஞ்சகமான அனைத்து வகையான பிரிவினை வாதத்தையும் எதிர்ப்பதற்கான எங்களின் கூட்டு தீர்மானத்தை நாங்கள் வலுப் படுத்தவேண்டும் - என்றார். (அ)

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் கிடையாது

## பாதுகாப்பு பிரதி அமைச்சர்



கொழும்பு, மார்ச் 26

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம் பெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் தேசிய பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அமைச்சரிடம் நாட்டின் பாதுகாப்பு குறித்த ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் இதனை கூறினார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர்-

நாடு முழுவதும் பொது மக்களின் பாதுகாப்பை நாங்கள் உறுதிப்ப டுத்தியுள்ளோம். அதற்காக ஒரு விசேட வேலைத்திட்டத்தை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம்.

இது பாதாளக் குழுக்களுக்கு இடையிலான மோதலாக உள்ளது.ஆனால் அதனால் தேசிய பாது காப்புக்கு பெரிய பாதிப்பு இல்லை. எங்கள் பொது பாதுகாப்பு அமைச்சு அதற்காக விசேட நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org